சிறுகதைகள்

பாகம் - 4

Book No. 5

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சிறுகதைகள் - பாகம் 4

1st Prize ☐

2nd Prize ☐

3rd Prize ☐

PRESENTED To

Mr. / Mrs. / Ms. ....

....

By ....

On...

Occasion ....

Published by:

SAM GURUBATHAM

2, Jeba Maaligai St.,
Railway Feeder Road,
Palayamkottai - 627 002.
Phone: 0462 - 2560691
Mobile: 94438 70776

© *all rights reserved*

SIRU KATHAIGAL - Vol - 4

First Edition: **Dec 2012**

Price: **Rs. 25/-**

Language : Tamil

Typset & Printed by:

South India Offset Press

Palayamkottai. Ph: 0462 2587366.

பொருளடக்கம்

எண்	தலைப்பு	பக்கம்
31.	கலியாணப் பந்தியில் கலாட்டா	6
32.	அழகா? அறிவா?	11
33.	மலைப் பாம்பு	14
34.	கிறிஸ்துமஸ் பரிசு	19
35.	சிகரெட்டுக்கு டாட்டா	22
36.	குவைத் ஆசை	27
37.	பொன் ஆபரணம்	31
38.	ஐயோ பாவம்	36
39.	விசுவாசத்தின் வெற்றி	41
40.	நகைப் பாக்கி	46

31. கலியாணப் பந்தியில் கலாட்டா

[சிறுகதை]

கெட்டி மேளம் கொட்ட, பெண்கள் பூக்களை அள்ளி கொட்ட, பொண்ணு கண்களில் ஆனந்த கண்ணீர் சொட்ட, போட்டோ காமிராக்ககள் கண்களை சிமிட்ட, வீடியோ பேரொளி மின்னல் போல் வெட்ட, கல்லூரி மாப்பிள்ளை களிப்புடன் தாலி கட்ட, கமகம பிரியாணி வாசம் ஹாலில் வந்து எட்ட, கருத்தாய் காத்திருந்த நாக்கில் நீர் சொட்ட, ஜனநெருக்க சந்தடியில் புழுக்கம் முட்ட, சாப்பாட்டு வேளையும் நெருங்கி கிட்ட, பிரியாணியைச் சுடச் சுட சுவைக்க ஓடிப்போய் முதல் பந்தியில் அமர்ந்து சுறுசுறுப்பு நாக்கு.

பச்சை வாழை இலை பள பளக்க, பட்டாடைகள் தளதளக்க, பவுண் வளையல்கள் சலசலக்க, பந்தி கூட்டம் கலகலக்க, பக்கத்து இலைக்காரர் சொன்னார். "மட்டன் பிரியாணியாம். மாபெரும் சமையல்காரர் அப்பாஸ் பாய் சமையலாம். அட்டகாசமாய் சமைப்பாராம்."

அதைக்கேட்டு நாக்கு ஆசையில் நாக்கை அங்குமிங்கும் சுழற்றி, குஷியில் கும்மாளம் போடுவதைக் கண்ட பற்கள் கூட்டத்துக்கோ பெரிய பொறாமை. கோபம் பொத்து கொண்டு வந்தது. "என்னடா, நாம் சுவைத்து, அரைத்து பக்குவமாகக் கொடுக்கிறோம். ஆனால் ரசிப்பதோ, ருசிப்பதோ, இந்த ஆக்கங்கெட்ட நாக்கு தான். எலும்பு இல்லாத நாக்குக்கு இத்தனை வசதியா? நாம் வேலை செய்யணு ம், இந்த நாக்கு மட்டும் சும்மா வீட்டுக்குள்ளயே இருந்து கொண்டு ராஜா மாதிரி அனுபவிக்க வேண்டுமோ? நாம் இல்லாவிட்டால் இந்த நாக்கு எப்படி ரசிக்கும், ருசிக்கும் என்று பார்ப்போம்" என்று பற்கள் சிறு அவசரக் கூட்டம் ஒன்று போட்டு பேசின. ஒட்டு மொத்தமாக ஒரு தீர்மானம் போட்டது. "பிரியாணி சாப்பிடும்போது எப்படியாவது நாக்கை கடித்து துப்பிவிடவேண்டும்."

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஞானபற்கள் நல்லதொரு ஆலோசனை சொன்னது. "இந்தா, பாரு, யாரிடம் சண்டை போட்டாலும், நாக்கிடம் மட்டும் சண்டை போட்டுவிடக்கூடாது. அதற்கு எலும்பு இல்லை என்று நினைத்து கொள்ளாதீர்கள். அல்வாமாதிரி நறுக்கிவடலாம் என்று நினைக்காதீர்கள். "இனிய நாவு எலும்பையும் நொறுக்கும்" என்றும், நாவு ஒரு நெருப்பு என்றும், அது ஒரு கூர்மையான வாள் என்றும், அம்பு என்றும், சவரகன் கத்தி" என்றும் பைபிளில் படித்திருக்கிறேன். "கெடுவான் கேடு நினைப்பான்" என்று பெரியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நாம் சகோதரர். எனவே பொறாமை வேண்டாம். பொறாமையோ எலுப்புருக்கி என்றும் படித்திருக்கிறேன்."

"நான் பள்ளியில் படிக்கும்போது, எங்கள் தமிழ் பண்டிட் அன்று சொன்னது இன்றும் ஞாபகம் இருக்கிறது. நல்லா படிக்கிற மாணவர்களைப் பார்த்து பொறாமைப் படாதீங்கடா. நோட்டு புஸ்தகங்களை எடுத்து ஒளித்து வைக்காதீங்கடா. பொறாமைப் படுகிறவர்கள் பின்காலத்தில் எப்படி போவார்களாம் தெரியுமா? பொறாமை என்கிற வார்த்தையை திருப்பிப்போட்டு வாசித்துப் பார்" என்பார். நாம் ஒரு குடும்பம். எரிச்சலும் வேண்டாம். சமாதானமாய் சந்தோஷமாய் ஒற்றுமையாய் அவரவர் வேலையை அவரவர் செய்து இந்த கலியாண நாளில் மகிழ்ச்சியாக இருப்போம்" என்று அறிவுரை கூறியது ஞானபற்கள்.

மற்ற பற்களுக்கோ அது கேலிகூத்தாக இருந்தது. "அட, சரிதாண்டா, போடா. நீ எங்களுக்குப் பிறகு பிறந்தவன். அதிகம் படித்துவிட்டோம் என்ற ஆணவத்தில் அண்ணன்மாருக்கு புத்தி சொல்ல வந்துவிட்டாயாக்கும், முதன் முதல் பிறந்தவர்கள் நாங்கள் தான் தெரியுமா? என்று மீசையை முறுக்கிவிட்டது முன்னம்பற்கள்."

மேலும் தங்கப்பற்கள் ஞானப் பற்களைப் பார்த்து "போடா,

உன் ஞானம் உன்னோடிருக்கட்டும் எங்களுக்கு இல்லாத பலமா? மண்டையில் மசாலா இல்லாவிட்டாலும், கையில் கராத்தே பலம் இருக்கு தெரியுமா? என்று தற்பெருமையில் தலைமுடியை தட்டிவிட்டது தங்கபற்கள்.

வேண்டாம் அண்ணா இந்த வம்பு. இப்படிதான் அன்று நாக்குடன் சண்டைபோட்டு ஸ்டிரைக் பண்ணி சவைக்காமல் விழுங்கி, அஜீரணம் வரவே, பரிசோதனை செய்த டாக்டர், அந்த சொத்தைப் பல் தான் காரணம் என்று சொல்லி, பல்லைப் பிடுங்கியதில் கடவாய்ப் பற்கள் இரண்டை இழந்து விட்டோம். முப்பத்திரண்டு முப்பதாகக் குறைந்தது.

முந்தா நாள் அசனத்தில் நாக்குடன் சண்டை போட்டதால், தந்திரமுள்ள நாக்கு, சோற்றில் கிடந்த கல்லை நாசுக்காக கடவாய்ப் பற்களுக்குக்கிடையில் தள்ளவும், கடித்ததில் படார் என்று உடைந்து மேலும் இரண்டு பற்களை இழந்துவிட்டோம். எனவே இந்த இடும்பு வேண்டவே வேண்டாம் என்று கெஞ்சியது ஞானபற்கள்.

அதற்கு தங்கபற்கள், இந்த கலியாணத்தில் நாங்க மாப்பிள்ளை வீட்டுகாரங்க. இன்று எங்கள் ஆட்சி. எங்கள் அட்டகாசம்தான். பொண்ணு வீட்டு காரங்களை கேள்வி மேல் கேள்வி கேட்டு கண்கலங்க வைத்து விடுவோம். இன்று கலாட்டா பண்ணாமல் இந்த இடத்தை விட்டு போகிறதில்லை என்று மார்தட்டியது தங்கபற்கள்.

வேண்டாம் அண்ணா. இந்த கசப்பான வைராக்கியமும் விரோதமும் வேண்டாம். வைராக்கியமும் விரோதமும் எங்கயோ அங்கே கலகம் உண்டாகுமாம். பெண் வீட்டாருக்கு கொஞ்சம் இரக்கங் காட்டுவோம். எவ்வளவு பணம் செலவழித்து, அலைந்து திரிந்து கஷ்டப்பட்டு, இந்த பெரிய விருந்தை

ஒழுங்குபண்ணியிருப்பார்கள். இந்த நல்ல நேரத்தில் போய் நாம் மொட்டை அதிகாரம் பண்ணி நமக்குள் சண்டை போடலாமா? இன்று நாம் கலாட்டா பண்ணினால், நாளைக்கு நம்ம பிள்ளைகள் கலியாணத்தில் இன்னொருவன் கலாட்டா பண்ணுவான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். இந்த வீண் வம்பு எதற்கு? பேசாமல் நாம் சேர்ந்து ஜாலியாய் மட்டன் பிரியாணியை வெட்டுவோம் வாருங்கள் என்றது ஞானபற்கள்.

“டேய், அவன் கிடக்கான். நீங்க வாங்கடா, ஞானபற்கள் நம்முடன் சேராவிட்டாலும் மீதி 24 பேர் இருக்கிறோம். நாக்கு ஒண்டி, அதற்கு யார் உதவிக்கு வருகிறார்கள் என்று பார்ப்போம். எங்கள் முன்னம்பற்கள் யார் தெரியுமா? மைக் டைசன் தன் எதிரியின் காதைக் கடித்து துப்பியது போல் நாங்கள் இன்று நாக்கைக கடித்து துப்பிவிடுவோம்” என்று மீண்டும் முழங்கியது முன்னம்பற்கள்.

அமைதியாய்க் கேட்டு கொண்டிருந்த நாக்கு கருமமே கண்ணாயினார் என்று சொல்வது போல, பல் உதவி இல்லாமல் Jam ஜாமை விழுங்கியது. நாக்குக்கு வசதியாய், அன்று பிரியாணி நன்றாய் வெந்திருந்ததால், சவைக்க வேண்டிய தேவையில்லாமல், பிரியாணியை ரசித்து விழுங்கி கொண்டிருந்தது நாக்கு.

“என்னடா, நாக்கு வெளியே வரமாட்டேன் என்கிறதே, என்ன செய்ய?” கேட்டது முன்னம்பற்கள்.

“அதோ பாயாசம் வருது. பாயாசத்தை சாப்பிட்டு விட்டு “தித்திப்பு சூப்பர்” என்று எப்போதும் சொல்லும். தித்திப்பு என்கிற வார்த்தையை சொல்லும் போது, கண்டிப்பா நாக்கு வெளியே வந்துதான் ஆகவேண்டும். அப்போ கடித்து விடலாம்” என்றது தங்கபல்.

ஆ..... ஊ என்று கத்தியது நாக்கு, ஆம் அது நாக்கு கடிபட்ட

சத்தம். "நல்லா வேளை மதுரம் என்று மலையாளத்தில் சொன்னேன். இலேசான கடி." நாக்கு அப்பொழுதும் கோபப்படவில்லை. பொல்லாதவனைக் கண்டால் பத்தடி தள்ளி நில்லு என்பது போல் ஒதுங்கி நின்று கொண்டு சற்று ஞானமாய் யோசித்தது. சரி, அதுதான் நல்ல ஐடியா என்று முடிவெடுத்தது. பற்கள் கத்தியை தீட்டியது. நாக்கோ புத்தியை தீட்டியது.

பாயாசம் இரண்டாந்தடவையும் ஊற்றவந்த மீசைக்கார பயில்வான் சர்வரைப் பார்த்து, "டேய், முட்டாள், பக்கத்து இலைக்கு பாயாசம் ஊத்துடா" என்று சத்தம்போட்டு சொல்லிவிட்டு ஓடிப்போய் ஒளிந்து கொண்டது நாக்கு. மீசைக்காரர் ஒரு முற்கோபி. "யாரை பார்த்துடா முட்டாள் என்று சொன்னாய்? பல் 32யும் தட்டி கையில் தந்து விடுவேன் தெரியுமா" என்று மீசையை திருக்கி எவர்சில்வர் கரண்டியால் ஓங்கி ஒரு அறை வாயில் அறைந்தான். அவ்வளவுதான், முன்னம்பற்கள் முன்னால் விழுந்தன. தங்கபற்கள் தரையில் விழுந்தன, தரையில் விழுந்த தங்கபல் தலையை சிறிது தூக்கி, தன்னை சுற்றிலும் வேடிக்கை பார்த்து கொண்டிருந்த கும்பலைப் பார்த்து வெட்கப்பட்டு, இவ்வளவு பெரிய கூட்டத்தில் ஒருவர்கூட நம்மை தூக்கிவிட வரவில்லையே என வருந்தியது. அதோ தூரத்தில் ஆம்புலன்ஸ் சத்தம் கேட்கவும், அருகிலுள்ள ஆலயக் கோபுரம் பகல் 12 மணியடித்து பழபொழி ஒன்றும் சொல்லிற்று.

"இடும்புள்ளவன் இடறி விழுவான். அவனை எடுத்து நிறுத்துவாரில்லை" (எரேமியா 50:32)

உடனே பாயாசம் ஊற்றியவர் மொபைல் போன் பாடல் பாடிற்று

நான் எனும் எண்ணமதால் பிறரை அவமானிப்பது
வெகுபாவம்.
அதின் மேல் நிற்குமே தேவ கோபம், மனஸ்தாபம்.

(பெயர்கள் யாவும் கற்பனையே)

32. அழகா? அறிவா?

[சிறுகதை]

மஞ்சள் வெயில் மறைந்தது. மணி ஆறு அடித்தது. மாலைபிறந்தது. மைனா, குருவி, காக்கா, கொக்கு, மரச் சோலை நோக்கிப் பறந்து, மரங்களின் உச்சியில் அமர்ந்து, மனரம்மியமாய்ப் பாடிப் பறந்து, மனைவிப் பிள்ளைகளோடு மகிழ்ந்து கொண்டிருந்தன.

மரச்சோலை மத்தியில் உள்ள வாட்டர் டேங் பக்கம் உள்ள பள்ளங்ளில் கிடந்த தண்ணீரில் காகங்கள் சில சிறகடித்துக் குளித்து தலைசீவி மர உச்சியில் வந்து அமர்ந்துப் பாட ஆரம்பித்தன.

காக்கா மாதிரி சத்தமாய்ப் பாட முடியாததால் பொறாமைப் பட்ட கொக்கு, "ஏய், காக்கா, நீ எத்தனை தடவைக் குளித்தாலும் எங்களை மாதிரி வெள்ளையாக இருக்க முடியாது. எங்கள் தலையிலுள்ள மூன்று முடி கிரீடம் மாதிரி இருக்கிற அழகு உனக்குக் கிடையாது என்றுப் பெருமைப் பாராட்டியது."

உடனே, காக்கா சொன்னது, உன்னிடம் ஒரே மீன் நாற்றம் நாறுகிறது. குளிக்கிறப் பழக்கம் உங்களுக்குக் கிடையாது. அதோ பார் மரத்தடியில் நிற்கிற கார் பானட் அழகு பெரிதல்ல. பானட் உள்ளே உள்ள இஞ்சின் தான் பெரிது. அதுபோல் உன் அழகு பெரிதல்ல, மண்டையிலே மசாலா இருக்கா? அது தான் பெரிது என்றது காக்கா.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, அந்த தெரு மக்கள் வந்து, மரத்தடியில் உட்கார்ந்து, ஊர்கவட்டம் போட்டுப் பேசினர். நம்ம தெரு சாக்கடை நாற்றம் தாங்க முடியவில்லை. சமன் கொடுத்துப் பார்த்தாச்சு, சண்டைபோட்டும் பார்த்தாச்சு, ஊர்வலம் போயாச்சு. ஊர் பஸ்சை நிறுத்திப் பார்த்தாச். ஒன்றும் நடக்கவில்லை. நம்ம கவுன்சிலர் அன்று சைக்கிளில் வந்து ஓட்டு கேட்டார். இன்று

ஏர்கண்டிசன் காரில் போவதால், நாற்றம் அவருக்குத் தெரியவில்லை. எனவே இந்த சாக்கடையை சுத்தம் செய்ய ஐடியா கொடுப்பவர்க்கு ஆயிரம் பொற்காசு என்று தீர்மானம் போட்டனர்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கொக்கு, "ஏய் காக்கா, கேட்டியா? அந்த சவாலை ஏற்க நான் ரெடி. நீ ரெடியா? நீயா? நானா?. யார் சுத்தம் பண்ணுகிறார்கள் பார்ப்போமா? சகதியிலேயேப் பழகின எங்களுக்கு இந்த சாதனை படைப்பது எளிது" என்று கொக்கு மார்தட்டியது.

மறுநாள் அதிகாலையில் ஆயிரம் கொக்கு வந்து ஆறுமணி நேரம் முயற்சித்தும் முடியவில்லை. பூச்சியைப் பொறுக்கி தின்றது தான் மிச்சம். கொக்கு கத்தியைத் தீட்டியது. காக்கா புத்தியைத் தீட்டியது.

காக்கா நேரே கவுன்சிலர் வீட்டுக்குச் சென்றது. அரண்மனை மாதிரி உள்ள வீட்டில் அந்தப்புரத்தில் உள்ள திறந்த வெளியில் கவுன்சிலர் குளித்துக் கொண்டிருந்தார். வழக்கம் போல் பதினொரு பவுண் மைனர் செயினைக் கழற்றித் துவைக்கிற கல்லில் வைத்து விட்டு, கண், காது, மூக்கு நிறைய சோப்பு நுரையோடு நிற்கும் போது பார்த்து, காக்கா பறந்து, மைனர் செயினைக் கவ்வி மொட்டை மாடியில் அமர்ந்தது. வாட்ச்மேன் காக்காவை பின் தொடர்ந்தான்.

சாக்கடைப் பக்கத்தில் மீன் காரர் மீன் நறுக்கிக் கொண்டிருக்கும்போது காக்காவின் வாயில் தங்கச் செயினைப் பார்த்து அதோ காக்கா வாயில் மைனர் செயின் பாருங்கள் என்று சொல்லி முடிக்கவும், காக்கா அந்த செயினை சாக்கடையில் போட்டுவிட்டது.

அதற்குள் கவுன்சிலர் காரில் வந்து இறங்கினர். போன் போட்டார். முனிசிபல் ஆபிஸில் உள்ள அத்தனை தொழிலாளிகளும்

வண்டியும் லாரியும் வந்து அரைமணி நேரத்தில் சுத்தம் செய்து மைனர் செயினை எடுத்துவிட்டுப் போய்விட்டார் கவுன்சிலர்.

மக்கள், கவுன்சிலர்க்கு நன்றி கூறாமல் மரத்திலிருந்த காக்காவுக்கு நன்றி சொல்லி, உனக்கு என்ன வேண்டும் என்று ஊர்மக்கள் கேட்டனர்.

காக்கா, இது தான் நாம் கொக்கை விரட்ட நல்லசமயம் என்று பார்த்து, ஐயா, எங்களுக்கு பொற்காசும் வேண்டாம், பொற்கிளியும் வேண்டாம். ஒரு வெள்ளைத்துணி வாங்கி, அதில் “அழகா? அறிவா?” என்று எழுதி எங்கள் மர உச்சியில் வெள்ளைக் கொடி பறக்கும்படி ஒரு கம்பத்தில் கட்டி விடுங்கள். அது போதும் என்றது.

மாலையில் மரம் நோக்கிப் பறந்து வந்த கொக்குகள், ஐயோ கொக்கைச் சுட்டு கட்டித் தொங்கக் போட்டிருக்கிறார்கள் என்று நினைத்து இனி இந்தப் பக்கமே தலை வைத்து படுக்கக்கூடாது என்று சொல்லிப் பயந்து குளத்தாங்கரை ஆலமரம் நோக்கிப் பறந்து செல்லவும், அருகிலுள்ள ஆலயக் கோபுரக் கடிகாரம் மாலை 6 மணி அடித்து அழகான பைபிள் வசனம் ஒன்றும் சொல்லிற்று.

சௌந்தரியம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண். பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம். (நீதி. 31:30 ; பிரசங்கி 9:16)

உடனே ஊர்த்தலைவர் கையிலுள்ள மொபைல் போன் அழகான பாடல் பாடிற்று

திரண்ட ஆஸ்தி உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிகவிருப்பினும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரியப் பெருமை யாவும் அற்பமே - விந்தைகிறிஸ்து

பெயர்கள் யாவும் கற்பனையே)

33. மலைப் பாம்பு

[சிறுகதை]

"பேப்பர், பேப்பர், நீயூஸ் பேப்பர் சுடச் சுடச் செய்தி," என்று கத்திய சிறுவனைக் கூப்பிட்டு, பேப்பர் வாங்கி வாசித்தார் ரமேஷ் பாபு.

"பள்ளி மாணவி படுகொலை, பஞ்சாயத்து பிரஸிடெண்ட் தலை மறைவு. பத்தாம் வகுப்பு மாணவி டியூசன் போய்விட்டுத் திரும்பிவரும் வழியில் இரயில்வே தண்டவாளம் அருகே பிணமாக கிடந்தாள். பாலியல் பலாத்காரம் தான் கொலைக்குக் காரணம் என்று டாக்டர் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் கொடுத்தார். கூடச் சென்ற தோழி தப்பி வந்தவள் கொடுத்த தடயத்தின்படி கட்சிகாரன், பணக்காரன் பதவிக்காரன் மீது சந்தேகம். பஞ்சாயத்துப் போர்டு பிரஸிடெண்ட் ரமேஷ் பாபுக்கு போலீஸ் வலைவீச்சு."

காலையிலே செய்தித் தாளைப் படித்த ரமேஷ் பாபு, "அடா, நடந்ததை அப்படியேப் போட்டிருக்கிறானே. இரவோடு இரவாய் காரில் ஆந்திராவிலிருந்து ஆயிரம் மைல் தாண்டி இங்கே வந்த இடத்திலும், அனல் பறக்கும் செய்தி நம்மைச் துரத்துகிறதே. போலீஸ் வேறே வலை போட்டுத் தேடுகிறதே. இனி இங்கே பட்டணத்தில் இருந்தால் போலிசிடம் மாட்டிக்கொள்வோம்." என்று பயந்து, 50 மைல் தொலைவில் உள்ள குற்றால மலையில் போய் ஒளிந்தான், கொலைக்காரப் பாவி பஞ்சாயத்து பிரஸிடெண்ட் ரமேஷ் பாபு.

ரமேஷ் பாபு, குற்றாலத்தில் ஒரு நாள் மாறுவேடத்தில் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, பெட்டிக்கடை முன் நின்று, உள்ளங்கையில் பான்பராக் வைத்து நிமிட்டிக் கொண்டிருந்தவனை சந்தேகப்பட்டு, மடக்கிப் பிடித்தனர் நாலு போலீசார். ஆனால் கட்டுகட்டாகப் பணம் அள்ளி வீசி நெல்லைப் போலிசுக்கே அல்வா கொடுத்து விட்டு, புலியைக் கண்ட மான் மாதிரித் துள்ளிக் குதித்து ஓடி மலங்காட்டுக்குள் போய்ப் பதுங்கினான். மலையடிவாரத்தில்

காட்டுப் பங்களா ஒன்றை வாடகைக்கு எடுத்து, காதலியுடன் உல்லாசமாக வாழ்ந்தான்.

ஆனால் மாணவியின் பெற்றோரோ மனமுடைந்து, வேறு குழந்தை எதும் இல்லாததால் தனி மரமாய்த் தவித்து நின்றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பரம ஏழை என்பதால் யாரும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை. அரசியல்வாதிகள் அட்காசம், யானை ஊருக்குள் வந்தது போலாயிற்று. அரசு மௌனம் சாதித்தது. ஊரும் உறங்கி விட்டது. நீதி நியாயம் கிடைக்குமா? இரட்டைப் பாவம் செய்த துரோகியை, இரண்டு நாளில் பிடித்து, இருவழிச் சந்தியில் மார்க்கட் முன்பு, தூக்கில் போட்டிருக்க வேண்டாமா, என்று ஆண்டவனே கண்திறந்துப் பார்த்து கயவனுக்கு நீர்தான் தீர்ப்பளிக்கணும் என்று தினமும் வேண்டினர் மாணவியின் பெறறோர்கள்.

தீடிரென்று காட்டு பங்களாவுக்கு போலீஸ் ரெய்டு வருவதைக் கேள்விப்பட்ட ரமேஷ், பின் வாசல் வழியாய்த் தப்பி ஓடி, இராமுழுவதும் நடந்து, சூரியன் உதிக்கும் போது மலை உச்சியில் உள்ள மரச்சோலையில் வந்து சேர்ந்தான். குரங்குக் கூட்டத்தின் கையில் வாழைப் பழம் பார்த்தான்; வாழை தானாக வளர்ந்து பழுத்து கிடந்தது. வயிராற சாப்பிட்டு வாய்க்கால் தண்ணீர் குடித்து மர நிழலில் படுத்தான் ரமேஷ்.

காட்டில் சிங்கம் கெர்ச்சிக்கும் சப்தம் கேட்டு குலை நடுங்கினான். சிங்கத்திடமிருந்து தப்பிக்க அருகிலுள்ள அடர்ந்த மரத்தில் ஏறினான். சிங்கம் மானை விரட்டி மான் பின்னே ஓடிவிட்டது. அப்பாடா, நல்ல வேளை சிங்கத்திடமிருந்து தப்பி உயிர் பிழைத்தோம் என்று சொல்லிக்கொண்டு, பசிக்குப் பழம் எதும் கிடைக்குமா என்று மேலே பார்த்தான். அங்கே பழம் பறித்துத் தின்று கொண்டிருந்த கரடி ஒன்று இவனைப் பார்த்ததும் பயங்கரமாய் உறும ஆரம்பித்தது.

அடா சிங்கத்துக்கு தப்பியும் கரடியிடம் மாட்டிக் கொள்வோமோ என்று பயந்து கீழே இறங்கினான். இரட்டைப் பாவம் செய்ததால் இந்தக் காடும் நம்மைத் துரத்துகிறதே, என்ன செய்ய. இனிக் காட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டியது தான். இப்போது வெகு நாளாகிவிட்டது. இதற்குள் ஆயிரம் கொலை நடந்திருக்கும். எனவே நம்மை மறந்திருப்பார்கள் என்று சொல்லி மீண்டும் காதலியின் காட்டுப் பங்களா வந்து சேர்ந்தான்.

காதலி அவனை அன்போடு வரவேற்று, இப்போது இங்கு ஒரு பயமுமில்லை. போலீஸ் தொந்தரவு எதும் கிடையாது என்றும் சொல்லவும், அதற்கு ரமேஷ், ஆமாம் இனி யாரும் என்னைப் பிடிக்க முடியாது. அந்தக் கடவுளே நினைத்தாலும், என் உயிரை வாங்கமுடியாது. இனி யாரிடமும் சிக்கிக் கொள்ளமாட்டேன் என்று பணத்திமிரினால் பேசிப் படுத்து அயர்ந்து தூங்கினான்.

தீடிரென ஒரு குழந்தை ஊதும் விசில் சத்தம் கேட்டுப் பயந்து நடுங்கி எழுந்தான். "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்," என்று சொல்வது போல் பயந்து நடுங்கினான். காதலியைப் பார்த்து, இந்த டார்ச்லைட் எடுத்துக் கொண்டு வெளியே போய் போலீஸ் யாரும் இருட்டில் நடமாடுகிறார்களா என்று பார், நான் எதற்கும் என்னுடைய தற்காப்புக்காக வீட்டுக்குப் பின்னால் உள்ள மரத்தடியில் இருட்டில் ஒளிந்து கொள்கிறேன் என்று வெளியே சென்றான்.

போகும் வழியில் மரத்தின் வேர் பெரியதாகவும் பளப்பளப்பாகவும் இருந்ததால் வழுக்கிக் கீழே விழுந்துவிட்டான் ரமேஷ். அதன்பின்பு தான் தெரிந்தது, அது மர வேர் அல்ல, மறைந்து வாழும் பாவிக்கு, மரணத்தீர்ப்பு கொடுக்க கடவுள் அனுப்பிய 20 அடி நீள பெரிய மலைப் பாம்பு. ஒரு நொடியில் அவன் மேல் சுற்றியது. பாம்பு உருள, ரமேஷ் உருள, ஓ வெனக் கத்தினான்

ரமேஷ்.

ஐயோ, என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று அந்தப் பள்ளி மாணவி கதறியது போலவே நானும் கதறுகிறேனே, என்னைக் காப்பாற்ற யாரும் இல்லையா என்று அலறும் சத்தம் கேட்டு ஓடி வந்த காதலி, டார்ச் லைட் அடித்து அந்த வெளிச்சத்தில் பார்த்தாள். அதற்குள் அந்த பாம்பு அண்டா மாதிரி ஆ வென வாயை விரித்து அவன் தலையை முதலாவது விழுங்கியது. அக்கம் பக்கத்தினர் வருவதற்குள் முழு உடலையும் விழுங்கி நகர முடியாமல் அங்கேயே கிடந்தது.

டாக்டர் வந்து பாம்பு வயிற்றைக் கிழித்து போஸ்ட் மார்ட்டம் செய்தார். ரமேஷ் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படவில்லை. மாணவி மூச்சுத்திணறி இறந்தது போலவே இந்தக் கொலைக்கார பாவியும் இறந்திருக்கிறான் என்று ரிப்போர்ட் கொடுத்தார்.

அந்தக் கிராமத்து மக்கள் அவன் உடலை ஆயிரம் மைலுக்கு அப்பால் உள்ள ஆந்திராவுக்கு எடுத்துச் சென்றனர். அந்தப் பஞ்சாயத்து ஊர் மக்கள் அதே தண்டவாளம் அருகே அவனைத் தூக்கிலிவிட்டு; "இனிமேல் யார் கொலை செய்தாலும் இதே கதிதான்" என்று எழுதி ஒரு போர்டும் வைத்து விட்டார்கள்.

மாணவியின் பெற்றோர் வந்து பார்த்ததும் "பாவம் செய்தவன் அரசனிடம் தப்பிவிடலாம். ஆனால் ஆண்டவனிடம் தப்பமுடியாது" என்பது எவ்வளவு உண்மை என்று சொல்லி பெருமூச்சு விடவும், அருகில் உள்ள ஆலயக் கோபுரக் கடிகாரம் ஆறுமணி அடித்து, அழகிய பைபிள் வசனம் ஒன்றை சொன்னது.

"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23)

"சிங்கத்துக்குத் தப்பினவனுக்கு கரடி எதிர்ப்பட்டது

போலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின் மேல தன் கையை வைத்தபோது, பாம்பு அவனைக் கடித்தது போலவும் இருக்கும்'' (ஆமோஸ் 5:9)

உடனே ரமேஷின் காதலி மொபைல் பாடியது

பாவத்தின் பெலன் நரகம், நரகம்
ஓ பாவி நடுங்கிடாயோ
காண்பெதெல்லாம் அழியும் அழியும்
காணாததல்லோ நித்தியம்
இயேசு ராஜா வருவார்,
இன்னுங் கொஞ்ச காலந்தான்
மோட்ச லோகம் சேர்ந்திடுவோம்.

(பெயர்கள் யாவும் கற்பனையே.)

34. கிறிஸ்துமஸ் பரிசு

[சிறுகதை]

டீச்சர், நீங்க சொல்லித்தந்த மாதிரியே நேற்று நான் ஜெபித்தேன். "இயேசப்பா, நல்ல சுகத்துக்காக நன்றி. ஆகாரத்துக்காக நன்றி. இயேசப்பா, இரவில் ஓலைக்குடிசையில் தூங்கும்போது அதிகக் குளிராயிருக்கிறது. இயேசப்பா, எனக்கு ஒரு போர்வை வாங்கித் தாரும்." என்று ஜெபித்தேன் டீச்சர். ஆனால் கலர் சொல்ல மறந்துவிட்டேன். எனவே மீண்டும் முழங்காலில் நின்று, இயேசப்பா, அந்தப் போர்வை சிவப்பு நிறத்தில் தாரும் என்று சொல்லிவிட்டேன், டீச்சர், என்று சொல்லி, துள்ளிக் குதித்து ஓடும் அணில் போல், துள்ளித் துள்ளி தாவித் தாவிக்குதித்து ஓடினாள் ஏழுவயது ஏழைச் சிறுமி சிங்கோனா.

வீதி நிறைய விதவிதமான மின் விளக்குகள், விண் அதிரும் வெடிச்சத்தங்கள், வீடுகள் தோறும் விட்டு விட்டு எரிந்து கண்சிமிட்டும் கிறிஸ்மஸ் நட்சத்திரங்கள், விடிய விடிய விளக்குடன் பாடும் கேரல் வேன்கள் அனைத்தும் விடிந்தால் கிறிஸ்துமஸ் பண்டிகைப் பெருநாள் என்பதை வெளிப்படுத்தி கொண்டிருந்தன.

ஒரு வீட்டில் இரவு குடும்ப ஜெபத்தில் பாடல் பாடி வேதம் வாசித்து, அம்மா ஜெபித்தார்கள். இயேசுவே, என் எட்டு வயது மகன் எஸ்பால், இயேசுவைப் பார்க்க ஆசையாயிருக்கிறது, என்கிறான். நாளைக்கு கிறிஸ்துமஸ் அன்று எங்கள் வீட்டுக்கு வருவீரா? என்று கேட்கவும், காதில் ஒரு சத்தம் கேட்டது.

வருகிறேன், வந்தால் என்ன தருவீர்கள்.

விலையுயர்ந்த பொற்பரிசு தருவோம் என்றார்கள் அம்மா.

பொற்பரிசு வேண்டாம், குளிராயிருக்கிறது (O°C) எனக்கு கிறிஸ்துமஸ் பரிசாக ஒரு போர்வைத் தருவீர்களா?

தாராளமாய்த் தருகிறோம். நேற்று ஒரு போர்வை என் மகள் நஹ்றலாவுக்கு வாங்கினோம். அந்த சிவப்பு போர்வை வேண்டாம், ஆரஞ்சு நிறம்தான் வேண்டும் என அடம்பிடிக்கிறாள். எனவே போர்வை ரெடி என்றாள் அம்மா.

மறுநாள் அதிகாலையில் கிறிஸ்மஸ் ஆராதனைக்கு சென்று, மத்தாப்பு கொளுத்திவிட்டு வீட்டுக்கு வந்ததும், அப்பா, அப்பா, நம்ம வீட்டுக்கு வரும் இயேசு எப்படியிருப்பார் என்று எஸ்பால் கேட்டான்.

நல்ல உயரம், நீண்ட நரைமுடி, நெஞ்சுவரை தாடி, வெண்ணெய் பிஸ்கட் நிறத்தில், வெள்ளை சிவப்பு உடையில் அழகாக இருப்பார் என்று அப்பா சொல்லவும், காலிங்பெல் சத்தம் கேட்டு ஓடிக் கதவைத்திறந்தான் எஸ்பால்.

வெள்ளை உடையில் உள்ளூர் பாஸ்டர். கேக் டீ சாப்பிட்டு கேரல் கீத விழாவுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்ததும் அவர் போய்விட்டார். சற்று நேரங்கழித்து காலிங்பெல் சத்தம் கேட்டதும் ஓடிப்போய் கதவைத் திறந்தாள் நஹ்றலா. சிவப்பு நிறத்தில் கிறிஸ்மஸ் தாத்தா. கேக் டீ சாப்பிட்டு விட்டு கிறிஸ்மஸ் மர விழாவுக்கு ஆயிரம் ரூயாய் கொடுத்ததும் அவரும் போய்விட்டார்.

மீண்டும் காலிங்பெல் சத்தம் கேட்டதும் அப்பா சென்று கதவைத் திறந்ததும், கந்தை துணியில் குளிரில் நின்று கொண்டிருந்த சிறுமியைப் பார்த்ததும், கோபப்பட்டு, போ, போ இயேசு வரப்போகிற நேரம், தொந்தரவு செய்யாதே, என்ன, பசிக்குதா! கேக்கா! நாளைக்கு வா என்று சொல்லி ஓட ஓட விரட்டி ஓங்கி கதவை சாத்தினார் அப்பா.

வெகு நேரமாகியும் இயேசு வராததால் மீண்டும் அம்மா ஜெபித்தார்கள். இயேசுவே மதியமாகிவிட்டதே, ஏன் இன்னும் நீர் வரவில்லை? இயேசுவைப் பார்க்காமல் சாப்பிடமாட்டேன் என்கிறான்

எஸ்பால், என்றாள் அம்மா.

நான் உங்கள் வீட்டுக்கு வந்தேன். பசியோடு வந்தேன். பாசத்தோடு வந்தேன். ஒரு கேக் கூட தராமல் ஓட ஓட விரட்டி கதவை சாத்திவீட்டீர்கள், என்றார் இயேசு.

எப்போது எங்கள் வீட்டுக்கு வந்தீர். எப்போது உம்மை விரட்டியடித்தோம் என்றார்கள் அம்மா.

ஏழு வயது ஏழைச்சிறுமி சிங்கோனாவுடன் வந்தேன் நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை.

உதட்டிலோ உருக்கமான ஜெபம். உள்ளத்திலோ அரக்கக் குணம் என்று இயேசு சொன்னதைக் கேட்டதும், அப்பா ஓடிப்போய் அடுத்த தெருவில் நின்று கொண்டிருந்த சிங்கோனாவை அழைத்து வந்து, அன்பு காட்டி, அரவணைத்து, கேக், டீ, மட்டன் பிரியாணி மற்றும் சிவப்பு போர்வை கொடுத்து மகிழவும், சிங்கோனா கிறிஸ்மஸ் பரிசு பெற்று சிரித்து மகிழ்ந்து நன்றி சொல்லவும், அருகிலுள்ள தேவாலயக் கடிகாரம் மதியம் ஒரு மணி அடித்து அழகான ஒரு வசனம் சொல்லிற்று.

“இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்” (மத்தேயு 18:5)

என்று சொல்லவும், அப்பா கையிலுள்ள மொபைல் போன் இனிமையான பாடல் ஒன்றும் பாடிற்று.

♫ **பெத்தலையில் பிறந்தவரைப் போற்றித்துதி மனமே...**

(பெயர்கள் யாவும் கற்பனையே)

35. சிகரெட்டுக்கு டாட்டா

[சிறுகதை]

"பளார், பளார்," பச்சிளங்குழந்தையை பால் மோகன் பளார் என்று அடிக்க, பையன் வீறிட்டு மூச்சு விடாமல் அழ, சமையல் அறையிலிருந்து அலறி அடித்து கொண்டு ஓடி வந்தாள் ஜானகி அலிஸ்.

"ஏங்க, ஏன் குழந்தையைப் போட்டு இப்படி அடிக்கிறீங்க? உங்களுக்கு என்ன பயித்தியம் பிடிச்சிப் போச்சா? நாமிருவர் நமக்கொருவர் என்று நானே ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று பொத்தி பொத்தி செல்லமா வளர்த்து வருகிறேன். நீங்க என்னான்னா, முட்டை புரோட்டா மாவைப் போட்டு மொத்து மொத்து என்று மொத்துகிற மாதிரி அடிக்கிறீங்களே. ஆத்திரம் வந்தா உங்க அக்கா பிள்ளையைப் போய் அடிங்க. அப்படி என்ன தப்பு பண்ணிட்டான், என் பிள்ளை? "அம்மா, அம்மா, ஒரு சந்தேகம்" என்றான். நான் பிளஸ் டு தான் படிச்சிருக்கேன். உங்க அப்பா ரொம்ப படித்தவர், புரொபஸர். அவரையே போய் கேள் என்று அனுப்பி வைத்தேன். ஊரான் வீட்டு பிள்ளைக்கெல்லாம் உற்சாகமாக சந்தேகம் தீர்த்து வைப்பீங்க; உங்க பிள்ளை கேட்டால் மட்டும் உக்கிரகோபம் வந்துடுதாக்கும்?!" அப்படி என்ன கேட்டு விட்டான்?

அப்படி கேள், அலிஸ்! அவன் பொடியன். சட்டைக்குக் கூட சரியா இன்னும் பட்டன் மாட்டத் தெரியவில்லை. முளைத்து மூணு இலை குத்தல. அதற்குள் துரைக்கு சந்தேகமாம். நானே வாங்கிய சம்பளம் எல்லாம் 20 நாளில் காலியாகி விடுகிறது. அடுத்த சம்பளம் வர இன்னும் 10 நாள் காத்திருக்க வேண்டுமே; எல்லாவற்றையும் டெசிமலுக்கு (Decimal) கொண்டு வந்தான். அணாவை நயாபைசாவாக மாற்றி வாக்கினான். இந்த மாதத்தையும் 10 நாளா டெசிமலுக்கு மாத்தியிருக்கக் கூடாதா? என்று ஏங்கிக்

கொண்டிருகிறேன். இவன் என்னான்னா, அப்பா அப்பா, ஒரு மாதத்துக்கு ஏன் 30 நாள்? ஏன் 40 நாளா இருக்கக் கூடாது? என்று கேட்டான். அதனால் தான் ....!

ஏங்க, 10 நாளைக்கு முன் பக்கத்து வீட்டில் பாயாசம் வாங்கி சாப்பிட்டதற்காக அடிச்சீங்க. அன்றைக்கு அடுத்த வீட்டில் அல்வா வாங்கி சாப்பிட்டதற்காக அடிச்சீங்க. முந்தாநாள் உங்க முட்டையைத் திருடி விட்டதற்காக அடிச்சீங்க. நேற்று உங்க பெட்டியிலிருந்த விஸ்கி பாட்டிலைத் தொட்டு மோந்து பார்த்தற்காக அடிச்சீங்க. இன்றைக்கு சிகரெட்டை எடுத்து வாயில் வைத்ததற்காக அடிச்சீங்க.

எந்த நேரம் என் கையைப் பிடித்து தாலி கட்டினீங்களோ, நம்ம தரித்திரம் நம்மைவிட்டு போக மாட்டேன் என்கிறது. என்றைக்கும் இந்த சிகரெட்டை விடப் போகிறீர்களோ, அன்றைக்கு தான் நமக்கு விமோச்சனம் பிறக்கும். உள்ள சொத்தில் பாதியை உங்கப்பா ஊதாரித்தனமா செலவழித்து அழிச்சிட்டு போயிட்டாரு. மீதி பாதியை நீங்க ஊதி ஊதியே அழிச்சிட்டீங்க. தீப்பெட்டி வாங்க கஞ்சத்தனம் பண்ணி ஒரு சிகெரட்டிலிருந்து அடுத்த சிகரெட்டைப் பற்றவைத்து சங்கிலிப் புகைக்காரனானீங்க. பெயருக்கேற்றாற் போல் பெண்கள் பின்னால் சுற்றி பேரும் கெட்டுப் போச்சு. அரை பாட்டல் அடித்து அறையிலிருக்கும் ஆடை விழுவதுகூட தெரியாமல் அலைந்தீர்கள். சே! நீங்க எல்லாம் ஒரு ஆம்பிள்ளையா?!

சதா லொள்ளு, லொள்ளு, என்று இறுமி, இறுமி, நம்ம பிராணனையும் வாங்கிறீங்க. மகளிர் மன்றம் போனால், என் தலைமுடி முதல் புடவை வரை ஒரே சிகரெட் நாற்றம் என்று தோழிகள் மூக்கைப் பொத்துகிறார்கள். பையனுக்கும் நுரையீரல் கறைபிடித்து அரைவருடப் பரீட்சையும் போச்சு.

அடுத்த வீட்டு ஜன்னலிருந்து அபுதாபி சென்ட் வாசம் மூக்கைத் துளைக்கும் இந்த நவ நாகரீக காலத்தில் நம்ம பெட்ரூமில்

மட்டும் சிகரெட் நாற்றம் தாங்காமல் தினமும் அடிபிடி சண்டை. பெட்ரூமில் அன்று தீப்பிடித்து என் நல்ல நல்ல புடவை எல்லாம் எரிந்து நாசமாய் போச்சு.

சம்பாதித்து சிக்கனமாயிருந்து, மனைவி பிள்ளைகள் ஆசைப்பட்டதை வாங்கிக்கொடுத்து படிப்புக்கு பார்த்து பாராமல் செலவழித்து, குடும்பம் நடத்த தெரிந்தால் கலியாணம் கட்டணும். இல்லாவிட்டால் கலியாணம் கட்டக்கூடாது. நகை ரொக்கத்துக்கு ஆசைப்பட்டு நல்லநல்ல பெண்களையெல்லாம் நாசமாக்கிவிடுகிறீர்கள். சி! நீங்க எல்லாம் ஒரு புரொபஸரா?! 15 வயதில் ஆரம்பித்து இந்த 35 வயது வரை குடித்த சிகரெட் தண்ணி கணக்குப் பார்த்தால், நாளொன்றுக்கு 40 சிகரெட் மற்றும் வீதம் 10 லட்சம் வரும். இந்த 10 லட்சத்தில் மாடிவீடு வாங்கி, மாருதிகார் வாங்கி, மாகாராசனா வாழ்த்திருக்கலாமே. படித்தும் பயத்தியமாகிவிட்டீர்களே!

சே! இந்த சிகரெட்டைக் கண்டு பிடித்தவன் குடும்பம் சீரழிந்து போகக்கடவது. சிகரெட் விற்கிறவன் குடும்பம் சின்னா பின்னாமாகக்கடவது. உங்களுக்கு முதல் சிகரெட் கொடுத்து பழக்கிவிட்டவன் குடும்பம் நாசமாய்ப் போகக்கடவது. வாதாடும் வக்கீல் போல் வார்த்தைகளை கொட்டினாள் அலிஸ்.

அலிஸ்..... வந்து..... என்று பால்மோகன் பதுங்கவும், காலிங்பெல் சத்தம் கேட்டு கதவைத் திறந்தாள் அலிஸ், சிங்கப்பூர் சித்தப்பா வந்து நின்றார்கள்.

''என் மனைவியின் தம்பியை அடையாறு கேன்சர் சென்டரில் அட்மிட் பண்ணியிருக்கிறார்களாம். அதைப் பார்த்து விட்டு வர தான் அவசரமாய் போய்க் கொண்டிருக்கிறேன். துணைக்கு பால் மோகனையும் அழைத்து செல்லவந்தேன்'' என்று சொல்லி இருவரும் அயனாவரத்திலிருந்து அடையாறு சென்றார்கள்.

ஆஸ்பத்திரியில் உள்ளே நுழைந்ததும், அங்குள்ள வாசககங்கள் பால்மோகன் கண்ணில் பட்டன. Smoking is injurious to Health, புகை சுகத்துக்கு பகை, Some Smoke, Others Choke. சிகரெட்டில் ஒரு பக்கம் நெருப்பு. மறுபக்கம் முட்டாள். Smoking is a Silent Killer உலகத்தில் வருடத்திற்கு 10 லட்சம் பேர் புகையினால் சாகிறார்கள் என்ற வாசககங்களை வாசித்ததும் சிந்திக்க ஆரம்பித்தான்.

அத்தனை நோயாளியும் ஒல்லியும் குச்சியாய், எலும்பும், தோலுமாய் பார்க்க அவலட்சணமாயிருந்தார்கள். சதா இறுமிக்கொண்டே இருந்தனர். பால்மோகன் மனம் பதறியது. முகம் வாடியது.

அதைத்தாண்டி உள்ளே சென்றால், சிங்கப்பூர் மாமாவின் மச்சினன் மறுத்துப்போன மர அட்டையாய் கிடந்தான். மெலிந்து, ஒடுங்கி, இறுமி, தும்மி கண்ணில் ஒளி இழந்து காட்டுக் கழுதைபோல் கிடந்தான். உடல் சிறுத்து, உதடு கறுத்து, உணவு வெறுத்து, வயிறுமட்டும் பெறுத்துப்போய்க் கிடந்தான். பால்மோகனுக்கு பழகிய முகம். ஆம், இருவரும் பள்ளியில் ஒன்றாய்ப் படித்தவர்கள். பள்ளி நாட்களை நினைத்தனர் இருவரும். “சிங்கம் மாதிரி அலைந்த தங்கபாண்டியா இப்படி மங்கிப் போய் படுத்திருக்கிறாய்?! பால் மோகனுக்கு பயம் அதிகரித்தது.

“மன்னிக்கவும், பள்ளியில் படிக்கும் போது பால் மோகனுக்கு முதல் சிகரெட் கொடுத்தது நான் தான், என் மனைவியும் மகளும் இந்த சிகரெட் நாற்றத்தால் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டார்கள். நானும் என் குடும்பமும் அழிந்தது இந்த சிகரெட்டால் தான். ஆம், சிகரெட், அது ஒரு வெள்ளைப் பேய், அசையாமல் கொல்லும் கள்ளப்பேய். அதன் உருவம் தான் புற்றுநோய். தயவு செய்து யாரும் புகை பிடிக்காதீர்கள் என்று சொல்லி முடிக்கவும் தங்கபாண்டி தலை சாய்க்கவும் சரியாக

இருந்தது.

பால்மோகன் கல்மனம் கரைந்தது. சிகரெட்டைத் தூக்கி குப்பைத் தொட்டியில் எரிந்தான். சிகரெட்டுக்கு டா டா என்றான். அப்பாலே போ சாத்தானே என்றான். நேரே வீட்டுக்கு வந்தான். ''அலிஸ், அயம் சாரி, இன்று மனந்திருந்திவிட்டேன். இனிமேல் சிகரெட் குடிக்க மாட்டேன். என்னை மன்னித்துவிடு.'' பாலில் விழுந்த பழமாய் நின்றான் பால்மோகன்.

அலிஸ் கண்களில் ஆனந்த கண்ணீர் பொங்க, கணவன் கையிரண்டையும் எடுத்து தன் கன்னங்களில் வைத்து அழுத்தி, கையிரண்டிலும் மாறி மாறி முத்தம் கொடுக்கவும் அருகிலுள்ள, ஆலயக் கோபுரக் கடிகாரம் இரவு 9 மணி அடித்து, ஓர் இனிய வாழ்த்துதலும் சொல்லிற்று.

''மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம், பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்.'' (லூக்கா 15:7)

உடனே பால்மோகன் மொபைல் பாடிற்று

வழி தப்பி நான் திரிந்தேன்
பாவ பழியதை சுமந்தலைந்தேன்..

(பெயர்கள் யாவும் கற்பனையே)

36. குவைத் ஆசை

[சிறுகதை]

டேய், ராஜ், என்னடா ஆகாயத்தைப் பார்த்து ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாய். இந்த சென்னை மீனம்பாக்கம் I.T.I.யில் நீ தான் அதிக மார்க் வாங்குகிறாய். பின்னே ஏன் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய் என்று நண்பன் முத்துக்குமார் கேட்டான்.

அதோ போகுது பார், அந்த குவைத் ஏரோபிளேனைப் பார்த்ததும், என் ஆசைக் கனவு என் ஞாபகத்துக்கு வந்தது. படித்து இஞ்சினியராகி குவைத்தில் வேலை கிடைத்து ஆகாய விமானத்தில் பறக்க ஆசைப் பட்டேன். 10ம் வகுப்பு படிக்கும் போது எங்கள் தகப்பனார் வேலை செய்த கம்பெனியை இழுத்து மூடிவடவே, எனக்கு பீஸ் கட்ட முடியாமல் போய் விட்டது. அதனால் தான் இந்த I.T.I க்கு வர வேண்டியதாகிவிட்டது. என் ஆசைக்கனவு ஊசிபட்ட பலூன் மாதிரி வெடித்து சிதறிக் போய்விட்டதே என்று சொல்லி பெருமூச்சு விட்டான் ராஜ்.

டேய்! கவலைப் படாதேடா. மின்னுவதெல்லாம் பொன்னல்ல, வெளுத்ததெல்லாம் பாலும் அல்ல. படித்தவர்கள் எல்லாம் மேதைகளும் அல்ல. படிக்காத மேதை காமராஜரை மறந்து விட்டாயா? டீக் கடையில் ஜாக்கிரதையாயிருந்து கடின உழைப்பால் VGP (Very Great Person) ஆன சரித்திரத்தை மறந்து விட்டாயா? அயராது உழைத்தால் ஆசை நிறைவேறும். நமக்குக் கொடுக்கப்பட்ட வேலையில் நாம் ஜாக்கிரதையாய், தாழ்மையாக நடந்து கீழ்ப்படிந்து உண்மையாய் கடின உழைப்பு உழைத்தால் கனவு கைகூடிவரும் என்று முத்துக்குமார் உற்சாகமூட்டியது டபுள் ஆம்லெட் போட்டு 3 கிளாஸ் பூஸ்ட் சாப்பிட்டது போல் மனதில் தெம்பும் தைரியமும் வந்து கஷ்டப்பட்டுப் படித்து முதல் வகுப்பில் பாஸ் பண்ணினான் ராஜ்.

சென்னையில் பிட்டர் வேலை கிடைத்து, மாதம் இரண்டாயிரம்

ரூபாய் கிடைத்தது. வேலை செய்யும் போதே வெல்டருடன் நட்பு கொண்டு, எடுபடி உதவி செய்து, உற்றுக் கவனித்து உண்மையாய் உழைத்ததால் வெல்டிங் வேலை கற்றுக் கொடுத்தார் வெல்டர். வெல்டிங் டெஸ்ட் எழுதிப் பாஸ் பண்ணி ஹைபிரஸர் வெல்டிங் வேலை ஒரு பிசிரும் இல்லாமல் எக்ஸ்ரே டெஸ்ட் அத்தனையும் பாஸ் பண்ணவே சூப்பர்வைசர் கண்களில் தயவு.கிடைத்து புரோமோஷன் கிடைத்தது. உடன் வேலை செய்யும் ஆங்கிலோ இந்தியனிடம் நட்பு கொண்டுப் பேசிப் பழகி இங்கிலிஷ் நியூஸ் பேப்பர் படித்து சரளமாக ஆங்கிலம் பேசக் கற்று கொண்டான் ராஜு.

ஒரு நாள் இங்கிலிஷ் பேப்பரில் வந்த விளம்பரம் பார்த்து மும்பையில் உள்ள கம்பெனிக்கு அப்ளை பண்ணி இன்டர்வியுவில் செலக்ஷன் கிடைத்து ரூ. 15000 வேலை கிடைத்தது. அங்குள்ள இந்திக்காரனுடன் நட்பு கொண்டு இந்தியில் சரளமாகப் பேசக் கற்று கொண்டார் ராஜு.அந்த கம்பெனியில் உள்ள டெஸ்ட் நிறைய எழுதி பாஸ் பண்ணி பதவி உயர்வு கிடைத்தது.

ஒரு நாள் இங்கிலிஷ் பேப்பரில் படித்து நரிமன் பாயிண்டுக்கு வாக்கின் இண்டர்வியுவில் செலக்ஷன் ஆகி அபுதாபியில் வேலை கிடைத்தது. ஆசையோடு அபுதாபிக்கு பறந்தார் ராஜு. அது தொழிற்சாலை கட்டுமானப்பணி, அதிக அனுபவம் இல்லை ராஜுவுக்கு. எனினும் அங்குள்ள மலையாள சுப்பர்வைசருடன் நட்புகொண்டு அவரிடமிருந்து வேலை கற்றுக்கொண்டு கடின உழைப்பு செய்து பலருடைய பாராட்டைப் பெற்றார் ராஜு.அங்குள்ள வெள்ளைக்கார மேனேஜருடன் நட்பு கொண்டு வேலையை அதிக ஜாக்கிரதையோடு செய்தார்.

அந்த வெள்ளைக்காரர் பிரிட்டிஷ் வெல்டிங் டெஸ்ட் எழுத வைத்து, ராஜு முதல் வகுப்பில் பாஸ் பண்ணியதால் உலக அளவில் அதிக மதிப்புள்ள சர்டிபிகேட் ராஜுவுக்கு கிடைத்தது.

அந்த மேனேஜர் மாற்றுதலாகி உயர் பதவியில் குவைத் கம்பெனிக்கு சென்றார். போகும் போது ராஜ்வின் கிழ்ப்படிதலையும், உண்மையையும், கடின உழைப்பையும், வேலையில் ஜாக்கிரதையும் கண்டு ராஜ்வை தன்னோடு அழைத்து சென்று விட்டார். சீனியர் சூப்பர்வைசர் போஸ்ட்டும் மாதம் 2லட்சம் சம்பளமும் கிடைத்தது.

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பது போல், வெள்ளைக் காரர்க்கு உள்ள சலுகைகள் அதாவது ஒரு மாதம் வேலை ஒரு மாதம் லீவு, 12 மாத சம்பளம் மற்றும் ஆண்டுக்கு ஆறு தடவை சென்னை வரை விமான டிக்கட்டும் இலவசமாகக் கிடைக்கவே ராஜ் கடவுளுக்கு நன்றி சொன்னான். அன்று நண்பன் முத்துக்குமார் சொன்னது போலவே ஆசை அரங்கேறியது.

ராஜ்வின் திறமையைக் கண்டு குவைத் அரசாங்கம் அவருக்கு தங்க மெடல் கொடுக்கவே, ஒரு நாள் அரண்மனைக்கு சென்று விருந்தில் கலந்து கொண்டு மன்னர் சுல்தானிடம் தங்க மெடல் வாங்கி வந்தார்.

ஒரு மாதம் வேலை முடிந்து விமானம் ஏறி சென்னைக்குப் புறப்பட்டார். விமானத்தில் பக்கத்து சீட்டில் முதல் வகுப்பில் சூட் கோட் போட்டு ஒருவர் வந்து அமர்ந்து, குட் ஈவினிங் சார் என்று வாழ்த்து சொல்லவும் குரலை அடையாளம் கண்டு கொண்ட ராஜ் டேய், நீ முத்துக்குமார் தானே....

அப்படியானால் நீங்கள் யார் சார் என்று உடனே அவர் கேட்கவும், டேய், உன் நண்பன் ராஜ் டா என்றதும் ஆச்சரியத்தில் இருவரும் கைகுலுக்கி சிரித்து மகிழவும் விமானம் புறப்பட்டது.

சென்னை விமான நிலையத்தில் இறங்கி ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து அனைத்து வாழ்த்துதல் சொல்லி விடைபெறவும்,

அருகிலுள்ள ஆலயக் கோபரக் கடிகாரம் இரவு 10 மணி அடித்து பைபிளில் 782ம் பக்கம் நீதிமொழிகள் 22ம் அதிகாரத்தில் உள்ள ஓர் அழகான வசனத்தை சொல்லி அமர்ந்தது.

“தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்.” (நீதிமொழிகள் 22:29)

உடனே ராஜ் கையிலுள்ள மொபைல் போன் ஓர் இனிமையான பாடல் பாடிற்று.

“பயப்படாதே நீ மனமே - நான்
காத்திடுவேன் உன்னைத் தினமே,
அற்புதங்கள் நான் செய்திடுவேன்
உன்னை அதிசயமாய் நான் நடத்திடுவேன்
- நான் உன்னை விட்டு விலகுவதில்லை”

(பெயர்கள் யாவும் கற்பனையே)

37. பொன் ஆபரனம்

(சிறுகதை)

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை, ஆலய ஆராதனைக்கு முதலாம் மணி அடித்தது. அலை அலையாய் மக்கள் பைபிளும் கையுமாய் ஆலயம் நோக்கி அதிவேகமாய் விரைந்து கொண்டிருந்தனர்.

"அத்தான், போய் ஸ்கூட்டரை ஸ்டார்ட் பண்ணுங்க, அதற்குள் நானும் இதோ கழுத்தில் ஒரு நெக்லஸ் மட்டும் போட்டுவிட்டு வந்துவிடுகிறேன் என்று சொன்ன அரோமா ஜாஸ்மின் திடீரென ஓ வென்று அலறினாள். ஐயோ! என் நெக்லசைக் காணோமே! அத்தான், நீங்க என் நெக்லசை பார்த்தீர்களா? போன புதனகிழமை தான் கலியான ரிசப்ஷனுக்குப் போட்டுவிட்டு கழற்றி, பீரோ லாக்கரில் இந்த இடத்தில் தான் வைத்தேன். அதற்குள் எங்கே போய்விட்டது? 3 பவுணாச்சே. ரூபாய் 70 ஆயிரம் ஆகுமே! என்னுடைய 100 பவுன் நகையில் 3 பவுன் குறைந்து விட்டதே, நான் என்ன செய்வேன் என்று அழுது புலம்பினாள் ஜேஸ்மின்.

அகிமாஸ் ஆனந்த், அருகிலுள்ள போலிஸ் ஸ்டேஷன் சென்று எப்.ஐ.ஆர். தகவல் கொடுத்தார். ஆலயத்தில் இராப்போஜன ஆராதனை முடிந்து காரில் வந்து இறங்கிய மேலவீட்டு மெல்பா ஜெபமலர் இதைக் கேள்விப்பட்டதும் அதிர்ச்சியடைந்து அதிக வருத்தத்தோடே ஜாஸ்மினுடன் சேர்ந்து வீடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை. அக்கா, அழாதீர்கள், ஆண்டவரிடம் ஜெபிப்போம். கண்டிப்பாய் கிடைத்துவிடும். பாறைக்குளம் அம்மா ஜெபவீட்டில் போய் ஜெபித்தால், பாக்கியம் அம்மா இதை யார் எடுத்தார்கள் என்று சொல்லி விடுவார்கள், என்று சொல்லி அழுகையை நறுத்தினாள் ஜெபமலர்.

போலீஸ் வந்தது. மோப்ப நாய் அங்கும் இங்கும் ஓடிக்

கடைசியில் மெயின் ரோட்டில் உள்ள போலீஸ் செக் போஸ்ட்டில் போய்ப் படுத்துக் கொண்டது.

உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா என்று போலீஸ் ஜாஸ்மினைக் கேட்டார்கள்.

அதற்கு அவள், எங்கள் வீட்டு வேலைக்கார அம்மாதான், என் பேத்தி வயதுக்கு வந்து விட்டாள். நாலு வீட்டில் வேலை செய்து சம்பாதித்து நெக்லஸ் செய்யும் போது, மாடல் காட்ட இதைத் தாருங்கள், உடனே திருப்பி தந்து விடுவேன் என்று சொன்னார்கள். கடவுள் என் பேத்திக்கு ஒரு நெக்லஸ் தருவார் என்றும் சொன்னார்கள். நான் பள்ளிக்குப் போகும் போது மேட்ச் கம்மல் மாற்றி விட்டு கண்ணாடி ஸ்டாண்டிலேயேப் போட்டுவிட்டுப் போய்விடுவேன். தொட்டு கூடப் பார்க்க மாட்டார்கள். அவ்வளவு நல்ல வேலைக்கார அம்மா.

அதற்குப் பெண்போலீஸ், வேலைக்காரியைக் காட்டுங்கள். நல்லவர்களா, கெட்டவர்களா என்பதை நாங்கள் சுண்டிப் பார்த்துவிடுவோம் என்று சொல்லி ஸ்டேஷனுக்கு கூட்டிக்கொண்டு போய் அடி பின்னிவிட்டார்கள். அரைப்பட்டினி என்பதால் அடி தாங்காமல் மயங்கி விழுந்து விட்டார்கள் அந்த வேலைக்கார அம்மா.

சனிக்கிழமை வந்து கேஸ் சிலிண்டரை மாற்றிச் சென்றவனை நையப் புடைத்தும் துப்புக்கிடைக்கவில்லை.

வெள்ளிக்கிழமை தண்ணீர் வடிகட்டும் ஆக்குவா கார்டுகாரன் கார்பன் மாற்றினான் என்று கேள்விப்பட்டு, அவனுடைய கழுத்து டையைப் பிடித்து இழுத்து செம உதை உதைத்தும் துப்பு துலங்கவில்லை.

அதற்குள் தெருவில் பெண்கள் கூட்டம் கூடியது. அதில் ஒரு பெண் இன்னொருத்தியிடம் மெல்லிய குரலில் முந்தாநாள்

வியாழக்கிழமை மேலவீட்டு ஜெபமலர் அம்மா, எங்க வீட்டுக்கு வந்து 3 பவுன் நெக்லஸ் காட்டி, கடன் அடைக்க 30 ஆயிரம் தாங்க என்று கேட்டார்கள். அன்றைக்குப் பார்த்து என்னிடம் 20 ஆயிரம் தான் இருந்தது என்றாள். அந்தக் கூட்டத்தில் துப்பறியும் இரகசியப் போலீஸ் மாறு வேடத்தில் பத்து பெண்கள் நடமாடியது அந்தப் பெண்ணுக்குத் தெரியாது.

பெண் போலீஸ், ஜாஸ்மினைப் பார்த்து, மேலவீட்டு மெல்பா ஜெபமலர் மீது எதும் சந்தேகம் உண்டா என்று கேட்டார்கள். அதற்கு அவள் ஐயோ, பாவம், யார் மேல் சந்தேகப்பட்டாலும் அந்த அக்கா மீது மட்டும் சந்தேகப்படாதீர்கள். அவர்கள் என்கூடப் பிறவா சகோதரி, பெரிய இடத்துப் பெண். போன வியாழக்கிழமை கூட, அந்த அக்கா தான் வந்து என் தலைமுடிக்கு கருப்புமை டைபோட்டுத் தேய்த்து விட்டார்கள். நான் போய்க் குளித்துவிட்டு வரும் வரை வீட்டைப் பார்த்துக் கொண்டும் டிவி பார்த்துக் கொண்டும் இருந்தார்கள் என்றாள் ஜாஸ்மின்.

டிவி சத்தத்ததுக்கும் திருடு கொலைக்கும் சம்பந்தம் உண்டு என்பதால் சந்தேகம் வலுத்தது. அதற்குள் ஒரு பெண் போலீஸ் ஓடிப்போய, ஜெபமலர் போட்டிருக்கும் 23 பவுன் தாலி தங்கம் அல்ல, ரோல்டு கோல்டு கவரிங் தாலி என்று மோப்பம் பிடித்துவிட்டு வந்து விட்டார்கள். ஜெபமலர் ஒரு பந்தா பார்ட்டி என்று நினைத்தார்கள். பந்தா பெண்களுக்கு கடன் வாங்கும் பழக்கம், பொய் மற்றும் திருடு குணம் அதிகம் இருக்கும், கடன் தொல்லை தாங்காமல் இதை எடுத்திருக்கலாம் என்று போலீஸ் கணிப்பு செய்தனர்.

மறு நொடியில் ஜெபமலரை ஜீப்பில் ஏற்றி கொக்கிரகுளம் பெண்கள் ஜெயிலில் உள்ள பெண்களைக் காட்டி, ஜெயிலில் உள்ள பெண்களைக் காட்டி, ஜெயிலில் போடவா அல்லது உண்மையை சொல்லுகிறாயா என்று பட்டுப்புடவைக்கிழிய நையப் புடைத்தனர்

பெண் போலீசார். உண்மை வந்தது. தங்க ஆசாரியிடம் 30 ஆயிரம் ரூபாய்க்கு கடன் அடைப்பதற்காக விற்றுவிட்டேன் என்றாள் ஜெபமலர்.

போலீஸ் உடனே தங்க ஆசாரி வீட்டுக்கு விரைந்தனர். மனைவி சொன்னாள், அவர்கள் இப்போது தான் மெயின் ரோட்டில் உள்ள போலீஸ் செக்போஸ்ட்டில் டூட்டியில் உள்ள தன் போலீஸ் தம்பிக்கு சாப்பாடு கொடுத்து விட்டு, அங்கிருந்து மதுரை பஸ்ஸில் ஏறி போய்க் கொண்டிருப்பதாக போன் பண்ணினார்கள் என்றாள். போலீஸ் மோப்ப நாய் போய்ப் படுத்த இடத்திலிருந்து பஸ் ஏறியது உறுதியாகிவிட்டது.

போலீஸ் மதுரைக்கு விரைந்தனர், வலை போட்டுப் பிடித்து, தங்கத்தை உருக்குமுன் போய் நெக்லசைக் கைப்பற்றி விட்டார்கள். டாலரில் ஜாஸ்மின் சொன்ன அடையாளம் அகிமாஸ் என்ற பெயர் இருந்தது.

போலீஸ் ஸ்டேஷன் போய் நெக்லசை வாங்கி வேலைக்கார அம்மா பேத்தியின் கழுத்தில் போட்டு, ஏழைகளின் ஆசீர்வாதம் பெற்றனர் அகிமாஸ் தம்பதிகள்.

ஆட்டோவில் வீடு திரும்பும்போது ஜாஸ்மின் சொன்னாள், எல்லாம் உங்கம்மா பண்ணின வேலை, நூறு பவுனுக்கு ஆறு பவுன் குறைந்தாலும் பொண்ணு கழுத்தில் தாலி ஏறாது என்று எங்க அப்பா அம்மாவை பய முறுத்தினார்கள். பெண்கள் எப்போ இந்த நகைப் பயித்தியத்திலிருந்து மனந்திரும்புவார்களோ தெரியவில்லை.

ஆபிரகாம் ரெபேக்காளுக்குப் போட்ட 15 பவுன் நகையை மட்டும் வைத்துக்கொண்டு மீதியை விற்று தரித்திரர்க்கும், கூன், குருடு, செவிடு, ஊமைகளுக்கும் உதவி செய்து இயேசு சொன்ன பரலோகப் பாக்கியத்தைப் பெறுவோம் என்றார் ஜாஸ்மின்.

நம்ம பையன் கலியாணத்துக்கு நகை ரொக்கம் கேட்டு சாபத்தை வாங்கிவிடக்கூடாது என்றார் அகிமாஸ்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல. வெளுத்ததெல்லாம் பாலுமல்ல. ஆலயம் செல்பவர்கள் எல்லாம் பக்தர்களும் அல்ல என்பது இன்று உள்ளங்கை நெல்லிக்கனியாயிற்று.

கர்த்தர் சொன்ன 10 கட்டளைகளில் எட்டாம் கற்பனை களவு செய்யாதிருப்பாயாக என்பதற்குக் கூடக் கீழ்ப்படிய முடியவில்லையே. நாம் எப்போ மனந்திரும்பி எளிய வாழ்க்கை நடத்தி இந்திய கிறிஸ்தவர்களின் 2 சதவிகித எண்ணிக்கையை 3 சதவிகிதமாக மாற்றப் போகிறோம்.

இந்த பொன்னாபரணத்தினால் இன்று பொன்னான ஞாயிறு ஆராதனையை நாம் இழந்தோம். இயேசுவே மன்னியும் என்று சொல்லவும், அருகிலுள்ள ஆலயக் கோபுரக்கடிகாரம் ஒரு பைபிள் வசனம் சொல்லிற்று.

“பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப் பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தேவப் பக்தியுள்ளவர்களாகத் தங்களை அலங்கரிக்க வேண்டும்.” (I தீமோத்தேயு 2:9,10)

உடனே அகிமாஸ் போன் பாடிற்று,

பொன் வெள்ளியுமோ, பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீண் அல்லவோ **- எந்தன்**

(பெயர்கள் யாவும் கற்பனையே)

38. ஐயோ பாவம்

[சிறுகதை]

“அந்த பையனைப் பற்றி பரம திருப்தி. ஆள் வாட்டசாட்டமாய் அழகாய் மாப்பிள்ளை மாதிரி இருக்கிறான். அப்பாடா, பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி செருப்பு தேய்ந்து போனது, நல்ல நல்ல பொண்ணுக்கு ஏன் இப்படி மெல்ல மெல்ல கலியாணம் கைகூடி வருகிறது, என்பது தான் எனக்கும் புரியல. M.Sc., M.Phil படித்த பொண்ணுக்கே இந்த பாடு! சரி. எப்படியோ இப்பவாவது ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைத்தாரே, அது போதும். இப்போதான் எனக்கு நிம்மதி,” என்று மைக்கேல் ராஜ் தன் மனைவி மேரி மெல்பாவிடம் சொல்லி முடிக்குமுன், தூரத்து சொந்தக்காரர் ஒருவர் ஓடோடி வந்தார்.

“நம்ம பூர்ணிமாவுக்கு அந்த புதுக் கோட்டை பையன் வேண்டாம். அவன் ஒண்ணும் நல்லவன் இல்லையாம். குடிகாரப் பாவியாம். நல்ல மாடு உள்ளூரிலேயே விலைபோகும் என்பார்கள்.ஆனால் இவ்வளவு அழகாக இருந்தும் இன்னும் ஏன் திருமணமாகவில்லை?! எனவே நான் சொல்வதை சொல்லி விட்டேன். இனி உங்கள் இஷ்டம்” என்று பஞ்சு மெத்தையில் பாராங்கல்லை தூக்கி போட்டது போல் போட்டு விட்டு ஓடி விட்டார்.

மைக்கேல் ராஜின் மனம் தளர்ந்தது. மெல்பாவின் உதடுகள் உலர்ந்தது. பூர்ணிமாவின் புன்னகை பூத்து உதிர்ந்தது. எங்கும் அமைதி. மைக்கேல் ராஜ் போனை எடுத்தார். புதுக்கோட்டையில் அவர் ஒருவர் தான் பெரியவர். அவரைக் கேட்டால் உண்மை தகவல் தருவார் என்று சொல்லி டயல் செய்தார்.

பையன் வீட்டிலும் பரபரப்பு. மாப்பிள்ளை டக்கர் டார்சன் மனம் சோர்ந்தான். இதோடு இருபது பெண் வீட்டார் வந்து போயாச்சு.

இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லிவிட்டு போய்விட்டனர். அக்கம் பக்கத்து வீட்டார் கோள் சொல்லி கலைத்து விட்டனர். இனி எனக்கு திருமணமே வேண்டாம். எனக்கு கழுத்தை நீட்ட எந்தபெண் வருவாள்'' ஏங்கினான், வீங்கினான். தனி மரமாய் தூங்கினான்.

ஆம், டக்கர் டார்சன் ஒரு கல்லூரியில் லெக்சரர். உதவாக்கரை நண்பர்களோடு சேர்ந்து புகைபிடித்தான், குடித்தான். உள்ளூர் ரவுடியானான். தாய் தகப்பன் சொல் கேட்காமல் தன் இஷ்டப்படி அலைந்தான். இனவெறியில் இழிவான தொழிலில் ஈடுபட்டு இருந்த வேலையை இழந்தான். பன்றியோடு சேர்ந்த பசுவும் பாழ் சாக்கடையில் படுத்துப் புரளும் என்பது போல், கெட்ட நண்பர்களோடு சேர்ந்து சாராயம் காய்ச்சி விற்றான். குடிவெறியில் கும்மாளம் போட்டு, குடும்பப் பெண்ணின் கையை பிடித்த குற்றத்தால், கோர்ட் கேஸாகி கோவை சிறையில் குடியிருந்தவன்.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது போல், தன் மகன் திருமணமானால் திருந்தி விடுவான் என்று எண்ணி திருமணம் செய்து வைக்க திட்டமிட்டனர் சௌத்திரபாண்டி தம்பதிகள். திருமணமால் தெளிந்துவிடும் என்பது உண்மைதான். ஆனால் எந்த பெண் முன் வருவாள்.

அந்த ஊரில் ஆலயக் குரு அமட்சன் ஆனந்தராஜ்க்கு மட்டும் டார்சன் அன்பும் மரியாதையும் செலுத்தி பணிவன்போடு நடந்து கொள்ளுவான். பாதிரியாரைப் பார்த்துவிட்டு தன்னை முடித்து கொள்ள திட்டமிட்டு, டார்சன் பாதிரியார் வீட்டுக்கு சென்றான். பாதிரியார் போனில் பேசிக்கொண்டிருந்தது காதில் விழவே, சற்று வெளியே நின்றான்.

''போனில் பேசினார் ஒருவர். நான் மதுரையிலிருந்து மைக்கேல் ராஜ் பேசுகிறேன். நீங்க ஊருக்குப் பெரியவங்க உங்க ஊர் பையனைப் பற்றி உண்மை தகவல் தெரியணும். என் மகள்

பூர்ணிமாவுக்கு உங்க ஊர் டக்கர் டார்சனைப் பார்த்தோம். பையன் குணம் எப்படி? குடும்பம் எப்படி?...

பாதிரியார் சற்று யோசித்தார். இது ஒருவனுடைய வாழ்க்கைப் பயணம் பற்றியது. இவனை ஏன் நாம் இன்பரயிலில் ஏற்றிவிடக் கூடாது? எப்படியும் டார்சன் நல்லவனாகி விடுவான் என நம்புகிறேன்.

அதற்குள் பாதிரியார் மனைவி பக்கத்தில் வந்து காதில் கிசுகிசுத்தார். நமக்கு ஏன் இந்த ஊர் வம்பு. யார் எப்படி போனால் நமக்கு என்ன. அவன் ஒரு பாவி, அவனுக்கு சப்போர்ட் பண்ணி பேசி வீடாதீர்கள். அவன் குடிகாரப் பாவி, கொலைகாரப் பாவி, கொடூரப பாவி என்று மெள்ள காதில் கிசுகிசுத்தாள்.

பாதிரியார் மனம் உருகியது. பரிதாபப்பட்டார். டார்சனுக்காகப் பரிதபித்தார். நானும் ஒரு காலத்தில் பாவிதான். என்னை திருத்திய கர்த்தர், பாவம், இந்த டக்கரையும் திருத்தமாட்டாரா?. கட்டாயம் அவன் நல்லவனாவான் என்று கர்த்தரை நம்புகிறேன். டார்சன் பாவம், ஐயோ பாவம். இந்த ஒரு உதவி மட்டும் அவனுக்கு செய்வேன்.

போனில் பதிலளித்தார், ''ஆமாம், டக்கர் டார்சனை எனக்கு நன்றாகத் தெரியும், ரொம்ப நல்ல பையன். அவனுக்கு தாராளமாக பெண் கொடுக்கலாம்'' என்று சொல்லி போனை வைக்கவும், காலிங் பெல் சத்தம் கேட்டு கதவைத் திறந்தார்.

டக்கர் டார்சன் நின்று கொண்டிருந்தான். கண்களில் காவேரி நதி போல் ஆனந்த கண்ணீர் மல்க நின்றான். வாழ்க்கையில் முதல் நாள் உள்ளத்தில் இருந்து சிரித்தான். செத்த மரம் தழைத்தது. பட்டமரம் துளிர்த்தது. மங்கிய விளக்கு மீண்டும் எரிய ஆரம்பித்தது. மறைந்த ஆதவன் உதயமானது. ஐயா, நீங்கள் ஒருவர் தான் என்னை நல்லவன் என்றீர்கள். என் வாழ்வில் விளக்கேற்றி வைத்த தெய்வம் நீங்கள். நீங்கள் பாதிரியார் அல்ல, என் பாச தந்தை.

சரி. அது இருக்கட்டும், இப்போது நான் அவசரமாய் தூத்துக்குடி கன்வென்ஷன் மாலைக் கூட்டத்துக்குப் புறப்பட்டு கொண்டிருக்கிறேன். நீயும் அவசியம் வரவேண்டும், பிரதர் பிராங்லின் பேசுகிறார். பெரிய கவலையும் மறைந்து பேரின்பம் கிடைக்கும். ஆத்துமாவுக்கு அமைதி கிடைக்கும். வா, போகலாம் என்றார்.

தூத்துக்குடி துரைசாமி திடல், தூசி நுழைய முடியாத அளவுக்கு கூட்டம். மாலை தென்றல் மனதுக்கு வசந்தமாக இருந்தது, கடற்கரை காற்று கரும்பாக இருந்தது. அந்த பெரிய கூட்டத்தில் பிரதர் பெயர் சொல்லி கூப்பிட்டார். "டார்சன், கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கிறார், டார்சன். யார் அந்த டார்சன்? உன் மேல் மனதுருகும் இயேசு சொல்லுகிறார். நீ இழந்த வேலை மீண்டும் தருகிறார். கண்ணியமான மனைவியை கர்த்தர் உனக்குத் தருவார்" டார்சன் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை மின்சாரம் பாய்ந்தது போல் ஓர் உணர்வு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க ஓடினான் மேடைக்கு, சந்தோஷமாய் சாட்சி சொன்னான்.

புதுக்கோட்டை கல்லூரியில் புரொபஸர் வேலை கிடைத்தது. திருமணமானது, பூர்ணிமாவுக்கும் அதே கல்லூரியில் வேலை கிடைத்தது. கை நிறைய சம்பளம். சம்பளம் வாங்கியதும் பத்தில் ஒன்றை எடுத்து பாதிரியார் கையில் கொடுத்து ஆசீர்வாதம் வாங்கினர். இந்தப் பாவிக்கும் வாழ வழி காட்டி உதவ உங்களுக்கு எப்படி ஐயா மனது வந்தது என்று டார்சன் கேட்கவும், அருகிலுள்ள ஆலயக் கேபுர கடிகாரம் மாலை ஆறுமணி அடித்து அழகான பதில் ஒன்றை சொல்லிற்று.

"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்." (I தீமோ 1:15). **"நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் "** (மத்தேயு 9:13).

உடனே மாப்பிள்ளை மொபைல் ஒரு பாடல் பாடிற்று

♫ **சந்தோஷம் பொங்குதே...**

(பெயர்கள் யாவும் கற்பனையே)

39. விசுவாசத்தின் வெற்றி

[சிறுகதை]

அன்று மாலை மணி ஆறு இருக்கும், ஆதவன் அடிவானம் சென்று அஸ்தமிக்க முயன்று கொண்டிருந்தான். அடிவான மேகங்கள் ஆதவனை மறைத்து அணைக்க அவசரப் பட்டுக் கொண்டிருந்தன. ஆதவனோ, மறைந்தும் மறைந்தும் மீண்டும் தெரிந்தும், கறுப்பு நிற மேகங்கள் மேல் ஒளி வீசும் வெள்ளிக்கோடுகள் வரைந்து நாட்டு மக்களுக்கு நம்பிக்கைகளை ஊட்டிக் கொண்டிருந்தான்.செவ்வான ஒளிக்கதிர்களில் ஒன்று செபஸ்டியான் நர்சிங்கோம் ஜன்னல் வழியாக ஊடுருவி, வரவேற்பு அரையை வெளிச்சமாக்கிக் கொண்டிருந்தது. அந்த அறையில் அமுல்ராஜ் குடும்பம் அவரது மெடிக்கல் ரிப்போர்ட்டுக்கான டாக்டரின் பதிலுக்கு ஆவலோடு காத்துக்கொண்டிருந்தனர்.

ஆம், அமுல்ராஜுக்கு திடீரென புரியமுடியாத புதுவகை புற்றுநோய் வந்ததால் மனைவி மார்ஜினா, மூன்று மகன்கள், மூன்று மருமகள்கள், ஆறு பேரப்பிள்ளைகள் அந்த அறையில் காத்திருந்தனர்.

உள்ளே பிரபல புற்றுநோய் மருத்துவர் டாக்டர் ஸடீபன் ஸ்டான்லி தன் சக டாக்டர்கள் பன்னிரெண்டு பேருடனும் அமுல்ராஜ் பற்றி பொறுப்பாய் ஆராய்ந்து கொண்டிருந்தனர். இந்த அமுல்ராஜும் மூத்த டாக்டரும் ஒன்றாய் படித்தவர்கள். ஒன்றாய் ஓடியாடி விளையாடியவர்கள். இன்றோ இந்த அறுபத்திரெண்டாம் வயதில் ஆச்சரியமான புதுவியாதி ஒன்று வந்திருப்பதாகவும், இதற்கு இந்தியாவில் மருந்து இல்லை என்றும், அமெரிக்கா போனால்தான் குணமாக்கமுடியும் என்றும் தீர்மானம் பண்ணி, அமுல்ராஜ் குடும்பத்தைப் பார்த்து "அடுத்த வாரமே அமெரிக்கா செல்லுங்கள். அங்கு எளிதில் குணமாக்கிவிடலாம்" என்று நம்பிக்கையூட்டும்

வார்த்தைகளை சொன்னார் பெரிய டாக்டர் ஸ்டீபன் ஸ்டான்லி.

அமுல்ராஜ் ஓய்வு பெற்ற இஞ்சினியர் அயல் நாட்டில் ஆறுவருடம் பணிபுரிந்தவர். ஓர் அன்பு தொண்டர். ஆண்டவன் மேல் அளவிலா, ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். ஆண்டவர் தன்னை எப்படியும் குணமாக்குவார் என்ற நம்பிக்கை கொடியை ஆனந்தமாய் நடுவானில் பறக்க விட்டுக் கொண்டிருந்தார்.

அமெரிக்கா என்றதும் மனைவி மார்ஜினாவுக்கு பதட்டம் அதிகரித்தது. அது சரி குணம் கிடைக்கும். ஆனால் பணத்துக்கு எங்கே போவது? ரூபாய் நோட்டு கத்தை கத்தையாய் பறக்கும் மொத்த செலவை நினைத்ததும், பெற்றெடுத்த மகன்கள் பெருமூச்சு விட்டனர். மருமகள்கள் முறுமுறுத்தனர். பேரப்பிள்ளைகள் மௌனமாகினர். கட்டிய மனைவி திட்ட ஆரம்பித்தாள்.

“அதற்குதான் நான் அப்போதே சொன்னேன், நம்ம கையை நம்பி நாமும் நாலு பேர் மாதிரி நாலுகாசு மிச்சம் பிடித்து வைத்திருந்தால் இப்போ உதவியாக இருக்குமல்லவா? வாங்கிய சம்பளத்தில் பாதிக்கு மேல் ஏழை எளியவர்க்கும் ஆலயத்துக்கும் ஊழியத்துக்கும் என்று கொடுத்துவிட்டீர்கள். போதாத குறைக்கு மாதா மாதம் முந்நுறு ரூபாய்தான் என்று சொல்லி, வட நாட்டிலிருக்கும் யாரோ ஒரு பையனுக்குப் படிப்பதற்காக என்று சொல்லி இருபது வருடமாக இருந்த பணமெல்லாம் தொடர்ந்து அனுப்பி எல்லா பணத்தையும் தொலைத்துவிட்டீர்கள், சொன்னால் கேட்டால் தானே. சவத்திற்கு சொல்புத்தியும் கிடையாது, சுயபுத்தியும் கிடையாது. யாராவது புத்தி சொன்னால், உடனே “ஆண்டவர் பார்த்துக் கொள்வார்” என்று வாய்க்கு வாய் சொல்லிவிடுவார்கள். நல்லா வேணும். இப்போ யார் உதவி செய்வாங்க? பைபிள் மட்டும் படித்தால் போதுமா? “பணம் எல்லாவற்றிற்கும் உதவும்” (பிரசங்கி 10:19) என்று பைபிள் சொல்லும் பழமொழியையும் படித்து வைத்துக்

கொள்ள வேண்டாமா? கிழடு... எப்படியும் போகட்டும் எங்கேயாவது போய்த் தொலையட்டும். LIC-யில் லோன் எடுத்தால், அமெரிக்காவுக்கு ஏரோபிளேன் டிக்கட்டுக்குதான் இருக்கும். அங்கு ஆஸ்பத்திரி செலவு, டாக்டர் பீஸ், ரூம் வாடகை, அது இது என்று லட்சக் கணக்கில் வருமே, அதை யார் கொடுப்பாங்க" பாப்கான் பொறியாய் பொறிந்து கொண்டிருந்தாள் மார்ஜினா.

அசையாமல் கேட்டுக் கொண்டிருந்த அமுல்ராஜ் அப்போதும் சொன்னார் "அமெரிக்காவிலும் ஆண்டவர் பார்த்துக் கொள்வார்" என்று ஆணித்தரமாகச் சொன்னார், விசுவாசத்தில்.....

அசையா நங்கூரமாய் இருந்தார். டாக்டர்கள் அவசரப் படுத்தவும் அடுத்த வாரமே அமெரிக்கா சென்று ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனார்கள் அமுல்ராஜ் தம்பதிகள். அம்மா கவலை எல்லாம் அப்பா சுகத்தைப் பற்றியல்ல. ஆகும் செலவுக்கு யாரிடம் போவது? யாரிடம் கேட்பது? என்பது தான். மட்டுக்கு மிஞ்சின கவலையால் மார்ஜினா கண்கள் மருகால் விழுந்த மானாமாரி குளமாயின.

அங்கேயும் வழக்கம்போல் தினமும் அதிகாலையில் செய்யும் ஜெபத்தில் அமுல்ராஜ் தன் வாய்ப்பாடு ஜெபத்தை சொல்லி ஜெபித்தார். "ஆண்டவரே, இப்போதும் உமது அடியேனுடைய, மனைவி மார்ஜினா, மகன்கள் ஜாக்சன், ராக்சன், டிக்சன், மருமகள்கள் ஜெமிலா, ஜெஸிமா, பூர்ணிமா, பேரப்பிளைகள் பென், கென், ரோன், லின்சி, வின்சி, நான்சி, மற்றும் வட இந்தியா மகன் குல்தீப் குமார் இவர்களை இரட்சித்து சுகம் பெலன், ஜீவன் கொடுத்து பாதுகாத்து வருகிற தயவுக்காய் நன்றி ஸ்வாமி," என்று படுத்துகொண்டே சொல்லி முடிக்கவும், காலை விசிட்டுக்காக பெரிய டாக்டர் Dr. குல்தீப்குமார் வந்தார்.

உடன் இருந்து உற்று கவனித்த நர்ஸ் நசீமா, பெரிய டாக்டரைப் பார்த்து கேட்டாள், டாக்டர், இந்த தாத்தா தினமும் உங்கள்

பெயரைச் சொல்லி ஜெபிக்கிறார்களே, உங்களை இந்த தாத்தாவுக்குத் தெரியுமா? என்று கேட்டாள்.

"அந்த பெரியவர் பெயரென்ன?" "அமுல்ராஜ்" "ஊர் பெயர்? இந்தியாவில் தமிழ்நாட்டில் திருநெல்வேலி" டாக்டர் தன் கேசியோ டயரியை எடுத்து தன்னிடமுள்ள விலாசமும் இந்த பெரியவர் விலாசமும் ஒன்றே என்று கண்டார்.

டாக்டர் அமுல்ராஜைப் பார்த்து "அப்பா, இருபது ஆண்டுக்குமுன் இந்தியாவில் கார் விபத்தில் என் அப்பா அம்மா இறந்து விட்டார்கள். நான் நடுத்தெருவில் அநாதையாய் அழுது கொண்டிருக்கும்போது, நீங்கள் என்னை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலம் தத்து எடுத்து தவறாமல் மாதா மாதம் பணம் அனுப்பி படிக்க வைத்தீர்களே அந்த அநாதை நான் தான்.

தேவன் தந்த ஞானத்தால் கவனமாகப் படித்தேன், ஆசிரியர்களுக்குக் கீழப்படிந்து நல்லபெயர் எடுத்தேன். இந்தியாவில் முதல் ரேங்கில் பாஸ் பண்ணினேன். எனவே அமெரிக்காவில் இலவச படிப்பு சலுகை அடியேனுக்குக் கிடைத்தது. டாக்டருக்குப் படித்தேன். அதிலும் முதல் மாணவன் என்ற பெயர் கிடைத்தது. ஆண்டவர் அருளால் மேல் படிப்பும் படித்து இந்த ஆஸ்பத்திரிக்கு தலைமை டாக்டராக இருக்கிறேன். புற்றுநோய் நிபுனர் என்ற பட்டமும் கிடைத்தது. எனவே கவலைப்படாதீர்கள், உங்களுக்குப் பரிபூரண சுகம் தருவார்.

இப்போதே **VIP** ஸ்பெஷல் வார்டுக்கு மாற்ற உத்தரவு கொடுத்துவிட்டேன். ஆகும் செலவு ஆறுலட்சமும் இலவசம்; எனவே அம்மா, உங்கள் கண்ணீரை துடைக்கவே எனக்கு இந்த பதவி கிடைத்திருக்கலாம், யாருக்குத் தெரியும். என் பங்களாவில் தங்க ஏற்பாடும் செய்துவிட்டேன். சிறுவயதில் பள்ளியில் படித்த புறாவேடன்

கதையை என்றும் நான் மறப்பதில்லை.

அம்மா உதட்டில் இன்று தான் புன்னகை பிறந்தது. என் வயிற்றில் பிறந்த பையன்களை விட, எடுத்து வளர்த்த பையன் இப்படி தங்கமாக இருக்கிறானே? இப்படியும் நடக்குமா? “ஆண்டவர் பார்த்துக் கொள்வார்” என்று எங்க வீட்டில் அவுங்க சொன்னது எத்தனை விசுவாசமான வார்த்தை. வெட்கப்பட்டு தலைகுனிந்தாள் விசுவாசி அமுல்ராஜ் முன். இத்தனை லட்சம் வேறு யார் கொடுப்பாங்க என்று ஆச்சரியத்தில் வியக்கவும், அருகிலுள்ள ஆலயக் கோபுரக் கடிகாரம் காலை எட்டுமணி அடித்து எழில் மிக்க பைபிள் வசன மொன்றை எட்டுதிக்கிலும் ஒலிபரப்ப, காற்றில் அலை அலையாய் எங்கும் பரவி எதிரொலித்தது.

“ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்” (பைபிள் நீதி 19:17)

உடனே அம்மா மொபைல் பாடிற்று

பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும் பட்சமாக
உதவி செய்வோம்.

(பெயர்கள் யாவும் கற்பனையே)

40. நகை பாக்கி

[சிறுகதை]

“அம்மா, அம்மா, அதோ பாருங்க உங்க அன்பு மகன் ரிம்மோன். யார் யாருக்குக் கொண்டு போய் காப்பி கொடுக்கிறாங்க பாருங்க! என்று அக்கா அணுமலர் அலுத்துக் கொள்ளவும், சமையல் கட்டிலிருந்து சாப்பாட்டு அரை பக்கமாய் தன் ஆந்தை கண்களை அகலமாய் விரித்தாள் அம்மா அகிலாமேரி அங்கே, மகன் ரிம்மோன் சுடச்சுட காப்பியை எடுத்து ஒரு கையில் தனக்கும் மறுகையில் தன்னை மகிழ்விக்கும் மனைவி பவளமலருக்கும் எடுத்து கொண்டு போய் கொடுத்து, “இன்ப இதயமே, என் அன்பு பவளமே, முத்துநகர் ரத்தினமே, இதோ காலை காப்பி சாப்பிடு” என்று சிரித்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தான்.

“டேய், ரிம்மோன், உனக்கு வெட்கமில்லையா, மனைவிக்கு காப்பி சுமந்த மக்காய்ப் போவாய் என்று நான் என் மனதிலும் நினைக்கவில்லை. சே! நீ ஒண்ணும் பொம்பள இல்லடா? நீ நீள முறுக்கு மீசை வைத்த முழு ஆம்பிள்ளைடா! மதுரை மண்ணில் பிறந்த மாவீரனடா” என்று முதுகு தட்டி முறுக்கேற்றிவிட்டாள் அம்மா.

புதுமணத் தம்பதிகள் பூரிப்பதைப் பொறுக்க முடியாத அக்கா பொறாமைப்பட்டு அன்புதம்பி வாழ்க்கையில் அணுகுண்டு தீப்பொறி வைப்பதைக் கண்ட பவளமலர்முகம் முற்றத்தில் மூன்றுநாளாய் காயவைத்த முறுக்குவடாம் போல் வாட ஆரம்பித்தது.

அன்பில் திருமணமாகி ஆறுமாதம் கழிந்தது. ஆசைக் கணவன் அன்பு திசைமாறியது. புதுவிளக்குமார் பரவி பெருக்கும் என்னும் பழ மொழி போலாயிற்று. பாசம் குறைந்தது.

ஆபிஸிலிருந்து வந்ததும் அக்கா உபசரிப்பில் அமிழ்ந்தான் ரிம்மோன். ஒண்ணாம் தேதி ஓடிவந்து, உழைத்த சம்பளத்தை ஒட்டு மொத்தமாய் அக்கா கையில் கொடுத்தான். சோபாவில் அம்மா மடியில் தலைவைத்து ஆனந்தமாய் டெலிவிஷன் பார்த்தான். அக்கா கணவன் இன்சூரன்சுக்கு தம்பி சம்பளத்திலிருந்து எடுத்துக் கட்டினாள் அக்கா. மதுரையில் "அதிசயம்" பார்க்கப் போயிருந்தபோது அக்கா கழுத்தில் கைபோட்டு எடுத்த போட்டோவைப் பார்த்ததும், அனலில் இட்ட மெழுகாய் அணு அணுவாய் உருக ஆரம்பித்தாள் பவளமலர்.

தாயும் மகளும் சேர்ந்து வேலைக்காரி வேலம்மாளை வேண்டாம் என்று விலக்கிவிட்டு வீட்டு வேலை அத்தனையும் பவளமலர் பக்கம் பங்கு போட்டனர். சலவைத் தொழிலாளி சக வாகனம் போல், சகலமும் சகிக்கும் செக்குமாடாய் சளைக்காமல் வேலை செய்தாள் பவளமலர்.

அம்மாவுக்கும் அக்காளுக்கும் பயந்து, ஒளிந்து நெழிந்து அங்குமிங்கும் பார்த்து, சத்தம் வெளியே கேட்காதபடி, ஆடிக்கொருதடவை, அம்மாவாசைக் கொருதடவையாக, மனைவியிடம் அன்பு வார்த்தைகளை அரசாங்க ரேஷன் கடைபோல் அளந்து அளந்து பேச ஆரம்பித்தான் ரிம்மோன்.

ஏங்க, தூத்துக்குடியில் எங்கள் அண்ணன் மகன் நவீனுக்கு நாளை மறுநாள் நாலாவது பிறந்த நாள். நேற்று போனில் பேசி ஞாபகப்படுத்தி நீங்கள் இருவரும் அவசியம் வர வேண்டும் என்று எங்க அண்ணி அழைத்தார்கள். போவோமா? போகும் போது வெறுங்கையோடு போகாமல் நேற்று நீங்க வாங்கி வந்த இரண்டு பாபாசூட்டில் ஒன்றை அன்பளிப்பாக கொடுப்போமா? என்று விக்கியும் விழுங்கியும் வேண்டுதல் செய்தாள் பவளம்.

நோ, நோ.. எங்க அக்கா பையனுக்கு இது நாலாவது பிறந்த

நாள் என்றும், நவநாகரீக மாடலில் இரண்டு செட் எடுத்து தரவேண்டும் என்று என்னை விடாய்ப்பிடியாய் பிடித்து விட்டாள் எங்க அக்கா. அதனால்தான் லேட்டஸ் மாடலில் ''கோடீஸ்வரன்'' செட் இரண்டு வாங்கி வந்தேன். எங்க அம்மாவும், தூத்துக்குடி போ, ஆனால் துணிமணி மட்டும் கேட்டுவிடாதே என்று நேற்றே சொல்லிவிட்டார்கள்.

சரி, பிறந்தநாள் விழாவுக்குப் போக பெர்மிஷனாவது கிடைத்ததே என்ற ஆனந்தத்தில், அவிழ்த்து விட்ட ஆட்டுக்குட்டியாய் ஆடிப்பாடித் துள்ளிக் குதித்து தூத்துக்குடி ஓடினர் இருவரும்.

இரண்டு நாளில் வந்து விடுவேன் என்று சொல்லிப் போனவர்கள், நாலுநாள் கழித்து வந்ததும், எரிமலைக் குழம்பாய் பொங்கினாள் அம்மா. டேய், போகத் தெரிந்தவர்களுக்கு வரத் தெரியாதோ? அங்கு என்ன எப்படி இனிப்பு? தூத்துக்குடியில் என்ன அப்படி தூள் பக்கடா?''

அம்மா,..... அது..... வந்து....... தூத்துக்குடி போனால் உப்பும் இனிக்குதும்மா. அதான் எனக்கும் புரியல அம்மா, என்னை மட்டும் இப்படி கேட்கிறீங்களே, நம்ம அத்தான் மட்டும் சென்னையிலிருந்து இப்படி நம் வீட்டுக்கு வந்து அறுபது நாளாச்சே! அது மட்டும் கண்ணுக்குத் தெரியலியோ? ஆப்பம், இடியாப்பம், ஆமவட பருப்பு வடை, ஆம்லெட், கட்லட் அது இது என்று அசத்துகிறீர்களே. மதுரை வந்தால் மாங்காயும் இனிக்குது என்று அத்தானும் சொல்லுகிறார்களே. அதுவும் புரியலியோ? அது மட்டுமா, பாளையங்கோட்டை போனால் பாவக்காயும் இனிக்கும் என்று நம்ம பப்பா சொல்லுவார்கள் என்றும், பாதி ராத்திரியிலும் பஸ் ஏறி பயமில்லாமல் பாளையங்போட்டைக்கு வந்து விடுவார்கள் என்று நீங்க அன்று சொன்னது எனக்கு இன்றும் ஞாபகமிருக்கிறது. அதுவுமா உங்களுக்கு மறந்து போச்சு? என்று சத்தம் வந்தும்

வராமலும், வாழைப்பழத்தில் ஊசி குத்தும் வக்கீல் போல் வாதாடினான் ரிம்மோன்.

“ஆமாண்டா, நான் நகை ரொக்கம் போட்டுக் கட்டிக் கொடுத்தேன். ஆனால் உன் மனைவி என்ன கொண்டுவந்தாள்? மூன்று லட்சம் தருவதாய் சொல்லி இரண்டு லட்சம் தந்தார்கள். அறுபது பவுன் போடுவதாகச் சொல்லி இருபது பவுண் நகை பாக்கி வைத்தார்கள். நல்ல நல்ல இடம் நாகர்கோவில் பொண்ணு என்று வந்ததை நீ வேண்டாம் என்று சொல்லிவிட்டாய். இப்போதே உன் மாமனாரிடம் போய் அந்த நகை பாக்கியைப் போய் வாங்கி வரச்சொல் உன் மனைவியை, என்று மருமகளைத் திட்டி ஆணவத்தில் அதிகாரத்தில் ஆத்திரத்தில் பெற்ற மகனைப் பேயாக்கிக் கொண்டிருந்தாள் அம்மா.

ஈவு இரக்கமின்றி, இருந்த நகை எல்லாம் கழற்றிவிட்டு “ஏண்டி, இப்பவே போய் இருபது பவுண் நகை பாக்கியை வாங்கி விட்டு வரல, நீயும் உன் புருஷனும் என் கண்களில் விழிக்கமுடியாது என்று வீம்பு பேசி வெறுங்கழுத்தாய் விரட்டியடித்தாள் வீண்பெருமை கொண்ட மாமியார்.

நாட்கள் கடந்தன. நகை பாக்கியைக் கேட்க ரிம்மோனுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. பவளம் இல்லாமல் பசிவாட்டியது. தனிமை வாட்டியது, எண்ணெயில் விழுந்த எறும்பாய், எரி நெருப்பில் விழுந்த துரும்பாய், ஏரியில் விழந்த எலியாய் தவித்தான், தள்ளாடினான். அம்மாவுக்கு தெரியமால் துரிதபஸ் பிடித்து தூத்துக்குடி சென்றான்.

“பவளம், இனி எங்கம்மாவுக்குப் பயப்படமாட்டேன். இப்போதே புறப்படு. எங்க அக்கா குடும்பத்தை இப்போதே எக்மூருக்கு அனுப்பி வைப்பேன். நமக்கு நகையும் வேண்டாம், நட்டும் வேண்டாம், ரொக்கமும் வேண்டாம், ரொட்டியும் வேண்டாம்,

வரதட்சணையும் வேண்டாம், வட்டியும் வேண்டாம். நம் சமபளம் நமக்குப் போதும்'' பெருந்தன்மை பெருக் கெடுத்து ஓடியது ரிம்மோனுக்கு. பவளமும் அம்மாவும் ''அப்பாடா, இப்போதான் பெரிய பாரம் தொலைந்தது'' என்று பெருமூச்சு விடவும், போன் பெல் அடித்தது.

ஹலோ! ரிம்மோனா? நான் உன் சித்தி மதுரையிலிருந்து பேசுகிறேன். நேற்று நள்ளிரவில் மதுரையில் நிலநடுக்கம் வந்து நேர்க்கடை வீதி முழுவதும் நிலத்துக்குள் புதைந்துவிட்டது. உங்கள் வீடும் புதைந்துவிட்டது. உங்க அம்மாவையும் காணோம், அக்காவையும் காணோம். உடனே புறப்பட்டு வா''. ஒருநிமிடம் பதைத்த ரிம்மோன் மறுநிமிடமே அவனும் பெருமூச்சு விட்டான். எங்கம்மாவுக்கு இத்தனை சடுதியில் இப்படி ஒரு முடிவா என்று கேட்கவும், அருகிலிருந்த ஆலயக் கோபுரக்கடிகாரம் அதிகாலை ஆறுமணி அடித்து இயேசுவின் பொன்மொழி ஒன்றை எட்டுதிக்கும் எடுத்துரைத்தது.

''**ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்க் கடவன்.**'' (பைபிள்: மத்தேயு 19:4)

(பெயர்கள் யாவும் கற்பனையே)

சாம் குருபாதம்

ஆசிரியரைப்பற்றி...

இந்தியநாட்டில், தமிழ்நாட்டில், நெல்லை மாவட்டத்தில், மருதகுளம் கிராமத்தைச் சேர்ந்த சாம் குருபாதம் கர்த்தருடைய கிருபையால் சிரியா, ஈராக், எகிப்து மற்றும் இஸ்ரேல் முதலிய வேதாகம நாடுகளில் பணிபுரிந்து, வேதாகம சரித்திரச் சான்றுகளை நேரில் பார்த்து ரசித்தவர்.

சிரியா: தமஸ்குபட்டணம், நேர்த்தெரு, சீஷன் அனனியாவீடு, பவுல் அப்போஸ்தலன் இயேசுவை தரிசத்த இடம், எர்மோன் மலை, ஒலிவ மரங்கள், அத்தி மரங்கள், கானான் பழங்கள் மற்றும் ஐபிராத்து நதித்தண்ணீரை 20 வருடம் குடித்து மகிழ்ந்தவர்.

ஈராக்: பிரதர் D.G.S. தினகரன் குடும்பத்தை அழைத்து பாபிலோன் நேபுகாத்நேச்சார் அரண்மனை தொங்கு தோட்டம், பாபேல் கோபுரம், பாபிலோன் ஆறுகள், தானியேல் கல்லறை, யோபு கல்லறை, நினிவே பட்டணம், யோனா கல்லறை, காட்டி மகிழ்ந்தவர். இதக்கேல் நதித் தண்ணீரை 8 வருடம் குடித்து மகிழ்ந்தவர்.

இஸ்ரேல்: இயேசு பிறந்து வளர்ந்த பெத்லகேம், நாசரேத்து, பெத்தானியா, லாசரு கல்லறை, இயேசு கல்லறை, கொல்கதா மலை, கெத்சமெனே தோட்டம், ஒலிவ மலை, கர்மேல் பர்வதம், எருசலேம், உப்புக்கடல், கலிலேயாக் கடல், மத்தியத் தரைக்கடல் முதலிய இடங்களைப் பார்த்து ரசித்தவர்.

எகிப்து: இயேசு வாழ்ந்த இடம், நைல் நதி, மோசே நாணல்பெட்டி, மோசே முட்செடி, ஓரேப் பர்வதம், பத்து கற்பனைகள் கொடுக்கப்பட்ட சீனாய் மலை பார்த்து ரசித்தவர்.

(அப் 4:20) "நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே" என்ற வசனத்தின்படி JTK TV யில் இஸ்ரேல் போகலாமா, எகிப்து இன்ப பயணம் தொகுத்து வழங்கியவர்.